


# ரமணோதயம்

ஏப்ரல் 2023

காலாண்டு

ஆராதனை இதழ்

விலை ₹ 20



# ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உதயம் 22 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்
ஏப்ரல் 2023

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2023


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | வேதாந்த விசாரம் - அத்தியாயம்-6 | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 13 |
| 3 | ஔவைக் குறள் | விளக்கம்: ராம் மோஹன் | 22 |
| 4 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 28 |
| 5 | யாவர்க்குமாம் ரமணன்; யாவர்க்குமாம் ரமணாச்ரமம் | D. தியாகராஜன் | 32 |
| 6 | ஸ்ரீரமணாச்ரம நூற்றாண்டு வைபவம் | சிவதாஸ் கிருஷ்ணன் | 41 |
| 7 | எங்கும் காண் ஆத்மாவின் காலடிச் சுவடுகள் | கௌதமன் | 47 |
| 8 | திருப்பும் திருக்கண் அருள் | வித்யாசங்கர் | 50 |
| 9 | 'ரமண புராணம்' சிவ ரமணன் மெய்ப்பரிசு | ஆகுரா | 51 |
| 10 | தக்ஷிணாமூர்த்தி ரூபிணி | தீபா மகேஷ் | 59 |
| 11 | ரமண சத்குரு | ஆர்தர் ஆஸ்போர்ன் | 63 |
| 12 | செய்திகள் | | 73 |
| 13 | இனிவரும் திருநாட்கள் | | 80 |

# ஆசிரியர் உரை

## மலைச்சாரலும் மரத்தடியும்

கருவிலேயே திருவுற்ற மஹா ஞானிகள் நமது பாரதம் செய்த பெருந்தவத்தினால் இடையறாது தோன்றிக் கொண்டே இருக்கின்றனர். பக்தியும் ஞானமும் ததும்பும் தம் பாடல்களால் நம் மனதைப் பழுது நீக்கி மேல் நோக்கிச் செலுத்தும் விழுதாக நம்மை உய்விக்கின்றனர். இவர்தம் வாக்கே இறைவன் வாக்கு

'எனதுரை தனதுரையாக' என்கிறார் சம்பந்தர்.

'என்நெஞ்சத்து உள்இருந்து இங்கு இரும்தமிழ்நூல் இவைமொழிந்து' என்று வியக்கிறார் நம்மாழ்வார்.

கருவிலேயே இறை உணர்வு நிரம்பப்பெற்று பந்து விளையாடும் பருவத்திலேயே பரமன் அருள் பற்றிப் பாடியவர்களான இந்த ஞானியர், இதன் சுவைப்பிழிவாக புளிய மரத்தின்கீழ் இருந்து பல்லாண்டு உபதேசித்த நம்மாழ்வார் பற்றியும் அருணமலைச் சாரலில் இருந்து அற்புதமாக அரன் அருள் பாடிய பகவானைப் பற்றியும் சிறிது காண்போமா?

அருணாசல அஷ்டகம் மூன்றாவது பாடலில் பகவான் பாடுகிறார்:

*நின்னையான் உருவென எண்ணியே நண்ண*
*நிலமிசை மலையெனும் நிலையினை நீதான்*
*உன்னுரு அருவென உன்னிடின் விண்ணோக்கி*
*உறஉல கலைதரும் ஒருவனை ஒக்கும்*
*உன்னுரு உனல்அற உன்னிட முந்நீர்*
*உறுசருக் கரைஉரு எனஉரு ஓயும்*

*என்னையான் அறிவுற என்னுரு வேறேது?*
*இருந்தனை அருணவான் கிரியென இருந்தோய்.*

பகவான் கூறியதாவது: “தேகாத்ம புத்தியோடு நான் உன்னை உருவமாய் நினைத்து நெருங்க நீ பூமியில் மலை என்னும் உருவம் கொண்டாய். உன் உண்மை, ‘அருவம்’ (உருவமற்றது) என்று நூல் வாயிலாகவும், ஆசான் வாயிலாகவும் அறிந்தும், அப்படி அருவமான ‘உன்னைத் தியானிக்கப் போகிறேன்’ என்றும் முயற்சியில் ஈடுபட்டோர், எங்கும் பரந்துள்ள ஆகாயத்தைக் காணும் முயற்சியில் உலகம் முழுவதும் அலையும் ஒருவனைப் போல் ஆகும். மனத்தின் எண்ணங்கள் இல்லாமல், மனம் அலையற்று உன் மெய்ம்மையைக் காண வேண்டி இதயத்தில் ஆழும்போது, கரும்புச் சாற்றுக் கடலில் மூழ்கும் சர்க்கரை பொம்மைபோல ஜீவனுடைய மெய்ம்மை உரு கரைந்து போம். ஆத்ம விசாரத்தின் மூலம் ‘நான் யார்’ என என்னையே நான் அறியும்போது, உன்னைவிட்டு வேறாக ‘நான்’ என்று எதுவும் இல்லை என அறிந்தேன். அருணகிரிவான் கிரியாக நீ மட்டுமே அல்லவா எஞ்சி நிற்கிறாய்” என்கிறார் பகவான்.

அருணமலைச் சாரல், அண்ணலின் இதே கருத்தை புளியங்குடி மரத்தடி முனிவர் நம்மாழ்வார் எங்ஙனம் கூறுகிறார் என்று காண்போம்.

*உளன் எனில் உளன் அவன் உருவம் இவ் உருவுகள்*
*உளன் அலன் எனில் அவன் அருவம் இவ் அருவுகள்*
*உளன் என இலன் என இவை குணம் உடைமையில்*
*உளன் இரு தகைமையொடு ஒழிவு இலன் பரந்தே*

*(திவ்யப் பிரபந்தம் 2790)*

இந்த அழகான பாடலில் திருக்குருகூர் நம்பி, “இறைவன் இருக்கிறான் என்று நாம் எண்ணினால் அவன் இருக்கிறான். அப்போது நமது உருவங்கள் எல்லாம் அவனது உருவங்கள் ஆகும். இறைவன் இல்லை என்று நாம் எண்ணினால் உருவம் இல்லாததான எவற்றினாலும்

அவன் இருக்கிறான் (அதாவது, அவ்வுருவங்கள் அவனது சூட்சும உடல் ஆகும்). இருக்கிறான், இல்லை என்ற இரு குணங்களையும் உடைய அவன் உருவம் மற்றும் அருவமான எல்லாப் பொருட்களிலும் நீக்கமற நிறைந்துள்ளான்” என்கிறார்.

‘இறைவன் உளன்’ என எண்ணுபவன் தனக்குப் புலப்பட்டதை எல்லாம் தேடித்தேடிப் பார்த்து, இறைவன் உண்மையில் அனைத்திலும் அடிப்படையாக உள்ளான் என்னும் உண்மையை உணர்கிறான். ‘இறைவன் இலன்’ என்பவனும், தனக்குப் புலப்படாதவை எல்லாவற்றையும் தேடிப் தேடிப்பார்த்து, தனித்தே ஒரு வ்யக்தி இல்லை என்று உணர்கிறான். எனவே ஆழ்வார் ‘இறைவன் உலன்’, ‘இலன்’ என்ற இரண்டு தன்னையோடும் ஒழிவில்லாமல் பரந்து உள்ளான் என்கிறார்.

மீண்டும் பகவானிடம் வருவோம். இந்தத் திருவாய்மொழிக் கருத்தையே பகவானும் ‘உள்ளது நாற்பது’ 4-ஆவது பாடலில் மீண்டும் ஆணித்தரமாக உரைக்கின்றார்.

உருவந்தான் ஆயின் உலகுபரம் அற்றாம்
உருவந்தான் அன்றேல் உவற்றின் உருவத்தைக்
**கண்ணுறுதல் யாவன்?எவன்? கண்ணலால் காட்சிஉண்டோ**
**கண்ணதுதான் அந்தமிலாக் கண்.**

அதாவது நான் உருவமான தேகம் என்று எண்ணினால் உலகும் பரமும்கூட உருவங்களே. உண்மையில் நான் உருவம் அல்ல என்றால் நமக்குத் தோற்றம் அளிக்கும் உலகின் உருவங்களைக் காண்கின்றவன் யார்? காணுவது எப்படிப் பார்க்கும் கண்ணின் தன்மைக்கு மாறாக காட்சி தோன்றாது. கண்ணின் தன்மை எப்படியோ அப்படியே காட்சியின் தன்மையும் அமையும். (காமாலைக் கண்ணுக்கு காண்பது எல்லாம் மஞ்சள்) அதையொத்து தேகாத்ம பாவம் உடைய அஞ்ஞானிகட்கு உலகம் அந்நியமாகியும், உருவம் - பொருள் நிரம்பியதாயும்

அமையும். அதுமட்டுமன்றி, பரமனுக்கும் ஓர் அல்லது பல வடிவங்கள் உண்டென்று எண்ணுவது இயற்கை. ஆனால் அவை பொய் மனமே எவ்வுருவங்களிலும் காண இயலாது உண்மையான நான் என்பது ஆன்மாவே அது எல்லையற்ற ஞானக் கண்ணாக இரண்டாக இரண்டற்று தனியாக விளங்குகிறது.

தேகாத்ம பாவம் நிலைக்காதவரை பக்தர் பரமனை உருவமாக எண்ணாமல் இருக்க முடியாது. ஆனால் அதுவும் நன்மையே. அவ்வெண்ணமே உபாசனா மார்க்கத்தின் படிக்கற்களாக அமைந்து உருவற்ற பரம்பொருளில் இறுதியில் ஒன்ற வழிவகுக்கின்றது.

இதே கருத்தை பகவத் கீதையில் கண்ணன் கூறுகிறார்.

தபாம்யஹமஹம் வர்ஷம் நிக்3ருஹ்ணாம்யுத்ஸ்ருஜாமி ச।
அம்ருதம் சைவ ம்ருத்யுஶ்ச ஸத3ஸச்சாஹமர்ஜுந!!

அர்ஜூனா! நானே வெப்பம் தருகிறேன். மழையைப் பெய்விக்கிறேன். அதுவராமல் தடுக்கவும் செய்கிறேன். இறப்பும், சாகாத நிலையும், ஸத்தும், அஸத்தும் நானே என்கிறார் கண்ணன்.

நாம் செய்த கர்மம் உயிர்களிடத்தில் செயலாகத் தோன்றும்போது ஸத் எனப்படுகிறது. தோன்றா நிலையே ‘அஸத்’ ஆகிறது.

இதே கருத்தைக் கம்பநாடரும் இராமாயணத்தில் உரைக்கின்றார்.

‘ஒன்றே’ என்னின், ஒன்றே ஆம்;
‘பல’ என்று உரைக்கின், பலவே ஆம்;
‘அன்றே’ என்னின், அன்றே ஆம்;
‘ஆமே’ என்னின், ஆமே ஆம்;
‘இன்றே’ என்னின், இன்றே ஆம்;
‘உளது’ என்று உரைக்கின், உளதே ஆம்;
(யுத்த காண்டம், கடவுள் வாழ்த்து)

என்று அழகாக உரைக்கின்றார்.

வேதாந்தத்தின் கொடுமுடியான உபநிஷத்தில் ஒன்றான ப்ரஹதாரண்யகமும் இதே கருத்தை வலியுறுத்துகிறது.

த்[3]வே வாவ ப்[3]ரஹ்மணோ ரூபே
மூர்த்தம் சைவாமூர்த்தம் ச
மர்த்யம் சாம்ருதம் ச
ஸ்தி[2]தம் ச யச்ச
சச்ச த்யச்ச (ப்ருஹதாரண்யகம் 2-3-1)

ப்ரம்மம், உருவம்-அருவம், அழிவது-நிலையானது, எல்லைக்குட்பட்டது-எல்லையற்றது, விவரிக்கக் கூடியது - விவரிக்க ஒண்ணாதது என்ற இருவேறு தன்மையிலுமே உள்ளது என்கிறார் ரிஷிபிரான்.

ஸ்ரீமத் பாகவதம் முதல் ஸ்லோகத்திலேயே, 'ஜன்மாத்[3]யஸ்ய யதோன்வயாத்3 இதரஹ' என்று தொடங்கி 'சார்த்2ஷ்வ பி4க்ஞ: ஸ்வராட்' என்று முடிக்கிறது. ஆம் என்னும் உடன்பாட்டாலும், இல்லை என்னும் எதிர்மறையாலும் இவ்வுலகத்தில் பிறப்பு முதலியன எதனிடமிருந்து உண்டாவதாக ஊகிக்கப்படுமோ, எல்லாப் பொருட்களின் உள்ளிருந்து அனைத்தையும் அறிவதான ஸ்வயம்பிரகாசமான எந்தப் பொருள் உளதோ, எந்தப் பரம்பொருள் தனது சங்கல்ப மாத்திரத்தாலேயே ப்ரஹ்மாவுக்கு ஸத்யத்தை உணர்த்தியதோ, ப்ருத்வி, வாயு, அக்னி, நீர் போன்று தோன்றும் உலகாகிய பொய்த் தோற்றத்தை எது உருவாக்கியதோ, அந்தப் பரம்பொருளைத் தியானம் செய்வோம் என்கிறார் வியாஸ பகவான்.

இதே கருத்தைத் திருவாய்மொழி ஏழாவது பாடலிலும்,

திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவைதொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்துளங்கும் பரந்துளன் (1-1-7)

என்று நம்மாழ்வார் குறிப்பிடுகின்றார்.

அவா ஏதும் அற்று சற்றும் அலையுறாத ஞான மலையாய்த் திகழ்ந்த பகவான், தன் முனைப்பு முற்றிலும்

*நீங்கிய பக்தர்கள் நீயே சரண் என்று பூர்ண சரணாகதி செய்யும்போது அவர்களை ஞானவாரிதியாய் உய்விக்கும் அருள்நிறைவான அமுதக்கடல் ஆனார். பல்லாண்டுகளாக சுத்த மௌனத்திலேயே ஆழ்ந்திருந்த திருக்குருகூர் நம்பியும், பல தேசம் கடந்து வந்து 'நீயே சரண்' என மதுரகவி ஆழ்வார் சரண்புகுந்தபோது 'செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?' என்று அவர் உள்ளத்தைப் பல நாட்களாக உறுத்திக்கொண்டு இருந்த கேள்விக்கு 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்?' எனச் சந்தேகத்தை உடனே நிவர்த்தி செய்து அபயம் அருளினார்.*

*இத்தகைய மஹாத்மாக்களின் சந்நிதி விசேஷத்தைக் கூறுங்கால் பகவானே விளக்குகிறார்.*

***கம்மயமாம் தீர்த்தங்கள் கல்மண்ணாம் தெய்வங்கள்***
***அம்மகத்துக்கு இணையே ஆகாவாம் — அம்ம-அவை***
***எண்ணில் நாளால் தூய்மை ஏய்விப்ப; சாதுக்கள்***
***கண்ணினால் கண்டிடவே காண்.***

*உள்ளது நாற்பது அனுபந்தம், பாடல் 5*

*தூய்மையான புண்ணிய தீர்த்தங்கள் கல், மண் இவற்றால் ஆன தெய்வ உருவங்கள் இவை யாவையும் நமது ஸத் குருவான மஹாஞானிக்கு ஈடு இணை ஆக மாட்டா. அவை எண்ணிக்கை இல்லாத பல்லாண்டுகள் கழிந்தபின்னரே அடிப்படைத் தேவையான மனத் தூய்மையை உண்டாக்கும். ஸாதுக்கள் தம் கண்களால் கண்டவுடனே மனது முழுத்தூய்மை அடையும்.*

*ஒருவன் தன் வாழ்நாளில் ஜீவன் முக்த புருஷனைச் சென்றடையும் வாய்ப்பு கிட்டுமாயின், அவனை விடப் பாக்கியம் செய்தவன் யார்? மஹான்களின் அருட்பார்வை வீழப் பெற்றவர்க்கு வேறெந்த கிரியைகளும் தேவையில்லை எனப் பகவானே தேவிகாலோத்தர பாடலில் கூறுகிறார்.*

*நீராட லுஞ்செபமு நித்தியவோ மம்பூசை*
*யாரழலின் காரிய மாதியாத் — தேருமோர்*

*சாதனமு மன்னோன் றனக்கென்று மின்றாமான்*
*மாதரசி யேநீ மதி.*

*தேவிகாலோத்தரம், பாடல் 62*

*அருளாளர்களின் திவ்ய தீக்ஷை பெற்ற சாதுக்களுக்குப் புண்ணிய தீர்த்த ஸ்நானங்களோ, மந்திர ஜபமோ, ஓங்கி எரிகின்ற அக்னியில் செய்கின்ற யாகம் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் எதுவுமே அவனுக்கு இல்லை. இவை எதுவுமே அவன் கடைப்பிடிக்க வேண்டிய தேவை இல்லை என இறைவன் கூறுகிறார்.*

*பற்றையும் ஆசையையும் அறவே ஒழித்து, இத்தகு ஸத்குரு உபதேசம் ஒன்றையே ஸம்சார ஸாகரம் கடக்கும் ஓடமாய்க் கொண்டு கரை ஏறுவாய் என்கிறார் தாயுமானவர்.*

*நினைவொன்று நினையாமல் நிற்கின் அகம் என்பார்*
*நிற்குமிட மேயருளாம் நிட்டையரு ளொட்டும்*
*தனையென்று மறந்திருப்ப அருள்வடிவா னதுமேல்*
*தட்டியெழுந் திருக்குமின்பந் தன்மயமே யதுவாம்*
*பினையொன்று மிலையந்த இன்பமெனும் நிலயம்*
*பெற்றாரே பிறவாமை பெற்றார்மற் றுந்தான்*
*மனையென்றும் மகனென்றுஞ் சுற்றமென்றும் அசுத்த*
*வாதனையாம் ஆசைமொழி வன்னொருசொற் கொண்டே.*

*உள்ளங்கை நெல்லிக் கனிபோல் ஞானாசிரியனின் உபதேசம் கற்று ஒழுகுதலின் பயனினைத் தாயுமானவர் மேலேகண்ட பாடலில் கூறுகிறார்.*

*எண்ண அலையே சிறிதும் எழாமல் மனமற்ற நிலையில் நிலைத்திருப்பதே ஆத்ம அனுபவம் என்று ஞானியர் கூறுவர். அப்படி நம் உணர்வு ஆத்மாவில் முற்றிலும் பதிந்து இருப்பதே அருள் நிலையம் என்பதாம். இடைவிடாத நிஷ்டையால் இவ்விறை அருள் சித்திக்கும். நான் என்னும் தன்முனைப்பு ஒருபொழுதும் எழாமல் விட்டுவிடும்போது நம் இதயத்தின் ஆழத்தில் உள்ள இருளானது தானாகவே மேல் எழும்பிவரும்.*

வேறு ஒன்றுமே இல்லாமல் தன்மயமாக இருப்பதே ஆனந்தம். அங்குச் செயல் எதுவுமே இல்லை. அந்தப் பேரானந்தத்தை உள்ளே உணர்வதே பிறவா நிலை பெறுதல். ஸத்குருநாதனின் ('தத்வமஸி' என்னும்) ஒரு சொல்லை விடாமல் பற்றி, அசுத்த வாசனைகளை ஒழித்து பரமாலை பெறுவாய் என்கிறார் தாயுமானவர்.

'சுகவாரி' என்றால் பேரானந்தப் பெருவெள்ளம். இவற்றை அறவே நீக்கி இந்த சுகவாரியில் திளைப்பதை சுகவாரிப் பதிகத்தில் தாயுமானவர் அழகாகக் கூறுகிறார்.

பற்றுவன அற்றிடு நிராசையென் றொருபூமி
பற்றிப் பிடிக்கும்யோகப்
பாங்கிற் பிராணலயம் என்னுமொரு பூமிஇவை
பற்றின்மன மறும்என்னவே
கற்றையஞ் சடைமௌனி தானே கனிந்தகனி
கனிவிக்க வந்தகனிபோல்
கண்டதிந் நெறியெனத் திருவுளக் கனிவினொடு
கனிவாய் திறந்தும் ஒன்றைப்
பெற்றவனு மல்லேன் பெறாதவனு மல்லேன்
பெருக்கத் தவித்துளறியே
பெண்ணீர்மை என்னஇரு கண்ணீ ரிறைத்துநான்
பேய்போ லிருக்கஉலகஞ்
சுற்றிநகை செய்யவே யுலையவிட் டாயெனில்
சொல்லஇனி வாயுமுண்டோ
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

இந்தப் பொருள் பொதிந்த பாடலில் சாதனா மார்க்கத்தில் முன்னேறும் ஒவ்வொரு படிகளையும் 'பூமி' என்று குறிப்பிட்டு விளக்குகிறார் தாயுமானவர். முதல்நிலையில் பொறிகளால் நுகரப்படும் பற்றுக்களை விடுவதற்கான சாதனையாகிய அவாவின்மையை முதல் பூமியாகக் குறிப்பிடுகிறார்.

அதை அடுத்துச் செல்ல வேண்டிய அடுத்த நிலை, யோக சாதனம் தீவிரமாகப் பயின்று,

பிராணனை உள்ளடக்கி லயமாக்குதல். இந்த இரண்டு சாதனைகளையும் முறையே பயின்றால் அலைபாயும் மனம் அடங்கி அழியும். பின்னர் ஜடாமுடி விளங்க தென்முக மூர்த்தியாய் என்முன் ஸத்குருநாதனாய்த் தோன்றி தனது மௌன உபதேசத்தின் மூலம் சாதனையில் பரிணாம நிலையில் உள்ள எனக்கு, தனது அளவற்ற கருணையால் எங்ஙனம் முக்திநிலை பெறுவது என்பதைக் காட்டினாய். அந்த உபதேசத்தை முற்றிலும் உள்வாங்கி என் இதயத்தில் பதிக்கும் நிலையில் அந்த ஞானசக்தியின் பெரும் தாக்கத்தால் நான் வாய்குழறி அரற்றி, உள்ளம் முற்றிலும் இளகி, என்ன ஆயிற்று இவனுக்கு? என்று உலகம் எனைப் பார்த்து நகை செய்யும்படி அலையும் நிலைக்கு என்னை ஆட்படுத்தினாய். உன்னுடைய கனிவான கருணையில் நான் முற்றிலும் கரைந்தபின் உன் மாபெரும் அருளை எடுத்துக் கூற எனக்கு வாயோ, சொல்லோ இல்லை அல்லவா? பரம்பொருளே! இங்ஙனம் என்னை ஆட்கொண்ட நீதான் 'நிர்க்குணமான பரம்பொருள், அகிலம் முழுதும பரம்சோதி, ஆனந்த சாகரம்' என அறிந்து கொண்டேன் எனத் தாயுமானவர் கூறுகிறார்.

ஜடாமுடியை உடைய மௌனகுரு முதிர்ந்த கனியை (பக்குவநிலையில் உள்ள சாதகனை) கனிவிக்க உபதேசித்த மார்க்கத்தை மௌன உபதேசத்தினால் உணர்த்தினார்.

தென்முகக் கடவுள் ரமண உபதேசத்திலும் ஆசை மற்றும் உணர்ச்சிகள் எங்கிருந்து எழுகின்றன அல்லது பிராணன் எங்கிருந்து எழுகின்றது என்பதைக் கூர்ந்து ஆய்ந்து கண்டறிதலால் ஆன்ம நிஷ்டன் ஆக முடியும் என்பதை பகவான்,

*இதயமே சார்வாய்! அதனை எண்ணி ஆழ்!*<br>
*அலது வாயுதன்னில் ஆழ் மனத்தால்!*<br>
*ஆன்மாவில் நிட்டன் ஆவாய்*

என உள்ளது நாற்பது அநுபந்தத்தில் கூறுகிறார்.

இதயமே சார்வாய்! அதனை எண்ணி ஆழ்! தேற்றேகாரத்துடன் பகவான் கட்டளையிடுகிறார். வேறு ஒன்றையும் நாடாது இதயத்தையே நாடுவாய்! அல்லது பிராணனில் மூழ்கி அதன் மூலத்தை அறிவாய்? இது ஒன்றே நீ செய்ய வேண்டிய சாதனை. இந்த ஆத்ம ஞானம் நம் இதயத்துக்கு உள்ளபடி எப்போதும் இருந்துகொண்டு உள்ளது வேறு பொருட்கள் மீது உள்ள நாட்டத்தை விடுத்து இந்தப் பாதையையே தவறாமல் பின்பற்றினால் நீ ஆன்ம நிட்டனாவாய் என்கிறார் பகவான்.

திருமூலர் திருமந்திரத்தில் 2097 ஆவது பாடலில் இதனை விளக்குகிறார்.

இருந்தேன் மலர்அளைந்து இன்புற வண்டு
பெருந்தேன் இழைக்கின்ற பெற்றிமை ஓரார்
வருந்தேன் நுகராது வாய்புகு தேனை
அருந்தேனை யாரும் அறியகி லாரே.

வண்டு இடைவிடாது நாடி, சிறுதுளி பெரு வெள்ளமாக தேன் சேகரிப்பதுபோல், சாதகனும் ஆன்ம ஞானத்தை அடைய வேண்டும். தானாகவே நம் உள்ளத்தே எழும்பிக் கொண்டு இருக்கும் 'நான்' என்னும் விருத்தியை இடைவிடாது பின்பற்ற வேண்டும். அப்படிச் செய்யாமல், இதயம் என்னும் வாயில் விழுங்கப் பெறும் தேனாகிய உள்ளே பொங்கும் 'நான்-நான்' என்னும் ஆன்ம ஞானமாகிய தேனை அறிய இயலாது.

இதுவே 'இதயமே சார்வாய்' என்னும் பகவானின் வழிகாட்டுதல். அதனையே பின்பற்றிப் பயன் பெறுவோமாக!

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# வேதாந்த விசாரம்

## அத்தியாயம் - 6

## நீயே அது

### டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன்

ஆரவாரமான சென்னை நகரிலிருந்து ஐம்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ளது அந்த வேதாந்த குருவின் ஆஸ்ரமம். அவர், இந்திய-மேற்கத்திய வேதாந்தங்களில் டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற பன்மொழி வித்தகர். சிஷ்யர்கள் மத்திய வயது கிரஹஸ்தர்கள்; ஆன்மீக நாட்டமுடையவர்கள்.

முந்தைய அத்தியாயங்களில் 'ஞான பாரம்பரியம்' பற்றிய விசாரம் நடைபெற்றது.

*சிஷ்யர்கள்: பலதரப்பட்ட ஞானிகளைப் பற்றிப் பார்த்தோம். ஆனால் இல்லற வாழ்வில் உழன்று தவிக்கும் எங்களுக்கு ஞானம் கைவரப் படுவதில்லையே.*

*குரு: இது பெரியதொரு பிரச்சினைதான். வாருங்கள் ஒரு மகானின் வாழ்க்கையைப் பார்ப்போம்.*

பட்டினத்தார் சிறந்த ஞானி. சித்தர் வரிசையில் வைத்துப் போற்றப்படுபவர். 11-ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தார்

என்று சொல்லப்படுகிறது. இவர் இயற்பெயர் ஸ்வேதாரண்யன் ஆகும். இது திருவெண்காட்டு இறைவனின் திருநாமம். இதுவே தீந்தமிழில் திருவெண்காடர் என அழைக்கப்பட்டது. 'ஸ்வேத' என்ற சொல் வெண்மையையும் 'அரண்யம்' என்பது காட்டையும் குறிக்கும். இவர், பெரும் தனவந்தர் குடியில் பிறந்தவர். திரைகடல் ஓடி திரவியம் சேர்த்த குடும்பம் அவருடையது. அதனால் மக்கள், அவர் இயற்பெயரை விடுத்து, காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தமையால் அவரைப் பட்டினத்தார் என்றே மரியாதையுடன் அழைத்தனர்.

கோடி கோடியாகப் பணமும் பொருளும் சம்பாதித்தாலும் உலகத்தை விட்டு நீ போகும்போது உன்னுடன் காதற்ற ஊசி கூட வராது என்று உலகிற்கு உணர்த்தியவர் பட்டினத்து அடிகள். மகனாகப் பிறந்த ஈசன் தனக்கு உணர்த்தியதை உலகிற்கு உணர்த்த செல்வங்களைத் துறந்து துறவியானவர். பொருளீட்டுவதில் மனம் செலுத்தாமல் அருளீட்டுவதிலேயே இவர் காலத்தைக் கழித்தார். கட்டிய கோவணத்துடன் இவர் துறவிபோல் வாழ்வது குடும்பத்தில் உள்ள நெருங்கிய உறவினருக்குப் பிடிக்கவில்லை. அவரைக் கொல்ல எண்ணம் கொண்ட அந்த உறவினர் நஞ்சு கலந்த அப்பத்தை அவருக்குக் கொடுக்கிறார். அதை உறவினரின் வீட்டுக் கூரைமீது எறிந்து 'தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்' என்று உரைக்க உடனே கூரை தீப்பற்றி எரிந்தது. ஊரார் அவர் பெருமையை அறிந்தனர். பற்று முழுவதும் அற்ற அவர் ஊரூராகத் திரிந்தார். பல பாடல்களை இயற்றினார்.

இவர் பாடல்கள் சைவத்தின் 11-ஆம் திருமுறையில் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

பெரும் செல்வத்தைத் துச்சமாகக் கருதி துறவறத்தை மேற்கொண்ட இவர் அரிய பல கருத்துகளைக் கூறியுள்ளார். வாழ்க்கை நிலையில்லாமையைக் குறித்து இவரது கூற்று புகழ் பெற்றது. இதை 'திருவேகம்பமாலை' என்னும் நூலில் காணலாம்.

*ஊரும் சதம்அல்ல, உற்றார் சதம்அல்ல, உற்றுப்பெற்ற*
*பேரும் சதம்அல்ல, பெண்டீர் சதம்அல்ல, பிள்ளைகளும்*
*சீரும் சதம்அல்ல, செல்வம் சதம்அல்ல, தேசத்திலே*
*யாரும் சதம்அல்ல, நின்தாள் சதம்கச்சி ஏகம்பனே.*

நாம் வாழும் ஊர், சூழ்ந்திருக்கும் உறவுகள், தேடி அலைந்து சம்பாதித்த புகழ், நமக்கு மிகவும் நெருங்கிய மனைவி, மக்கள், குடும்பம், நாம் பெற்ற சொத்து, சுகம் என்ற எதுவும் நிரந்தரமல்ல. உலகில் யாவையும் அநித்தியம். இறைவன் ஒன்றே நித்தியன். அவனைச் சரணடை - என்பார் இந்தச் சித்தர். இதற்கு நேர் விளக்கமாக அமைவது கண்ணன் கூற்று, 'அநித்யம், அசுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்' என்ற கீதையின் வரிகளில்.

இவர் உன்னத அத்வைத சித்தாந்தத்தை எளிய தமிழில் எடுத்துரைத்தார். பேரின்ப வாழ்க்கையைத் துறந்து என்றும் பொய் பேசி, பொருள் ஈட்டுதலையே பயனாகக் கருதி வாழும் மாந்தரை 'நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி' அலைபவர் என்று சாடுகிறார் இவர். இவர்கள் பெண்கள்பால் ஈர்க்கப்பட்டு, இல்லற சுகத்தில் ஆழ்ந்து குழந்தைகள் பலரைப் பெறுகிறார்கள். அவர்களை நன்கு வளர்க்கவும் திறமை இல்லை; அது மட்டுமல்ல, ஒரு கட்டத்தில் அதைத் துறந்து ஞானமார்க்கத்தில் மனதைத் திருப்பவும் இவர்களுக்குக் திண்மை இல்லை. இதை இவர் சொல்லும் விதத்தைப் பாருங்கள்,

*நலனொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்*
*பூப்பிளக்க வருகின்ற புற்றீசல்போலப்*

*புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்*
*காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்*

இங்கும் இல்லாமல் அங்கும் இல்லாமல் இக வாழ்க்கையில் இன்பத்தைத் தொலைத்து, அதை விடவும் முடியாமல் தவிக்கும் இந்த இரண்டும் கெட்டான் நிலை மாந்தரை அவர் கிண்டலாக மரக்கிளையில் காலை விட்டு மாட்டிக்கொண்ட குரங்குகள் என்று வருணிக்கிறார்.

*கவர்பிளந்த மரத்தொளையில்கால் நுழைத்துக் கொண்டே*
*ஆப்புஅதனை அசைத்துவிட்ட குரங்கனைப் போல*
*அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே.*

மனதைக் குரங்கென்று அழைப்போம். இவர் மனிதனையே குரங்கென்று வருணிக்கிறார். இத்தகைய சீவன்கள் செய்யும் வழிபாடு எப்படி இருக்கும்? 'கையால் பூக்களை இட்டு பூசை செய்கையில் கண்கள் தெருவில் யார் போகிறார்கள் என்று பார்க்கும். காது, வீட்டில் யார் யார் என்ன பேசுகிறார்கள் என்பதை உன்னிப்பாகக் கேட்பதில் ஈடுபடும். நல்ல மசாலா போட்ட உணவு சமையல்கட்டில் தயாராகி வருகிறது. அதை நாக்கு பேரிச்சையுடன் நுகரும். மனமோ இன்று மாலை என்ன செய்யலாம் என்று திட்டம் போடும் - இவ்வாறு புலன்களெல்லாம் வெவ்வேறு சிந்தனையில் ஈடுபாட்டிருக்குமே, அந்த நிலையில் வெறும் பெயருக்குச் செய்யும் வழிபாட்டை நீ ஏற்பாயா? என்று வெதும்புகிறார் இந்த மகனீயர்.

கையொன்று செய்ய, விழியொன்று நாடக் கருத்தொன்று எண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவிஒன்று கேட்க விரும்பும்யான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே. (பொது 4)

இன்றைய சூழலுக்கு ஏற்ற விளக்கம். இறைவனை வெளியே தேட முடியாது. அவன் அந்தர்யாமி. நம் உள்ளே உறைபவன் என்னும் கருத்தைத் தெளிவு படுத்துகிறார்.

இதனால் நாம் தெளிவது என்ன?

இறைவன் எங்கோ இல்லை. அவன் நமக்குள்ளேயே இருக்கிறான். அவனைத் தவிர மற்றைய எண்ணங்கள் அழியும்போது அவன் புலப்படுகிறான். ஒரு சிற்பி என்ன செய்கிறான்? பாறையில் உள்ள தேவையற்ற பகுதிகளையெல்லாம் செதுக்கி நீக்க, ஓர் அழகிய உருவம் புலப்படுகிறது. அவன் எதையும் புதிதாக உண்டாக்கவில்லை. அவனுக்குத் தேவையான வடிவம் அவன் அகக்கண்ணுக்குப் புலனாகிறது. தேவையற்ற மற்ற பகுதிகளை விலக்க, அவன் விரும்பிய உருவம் வெளிப்படுகிறது. இதே பாறை மற்றவர்கள் கண்ணிலும் படுகிறது. அவர்களுக்கு அதற்குள் இருக்கும் அழகிய மூர்த்தி புலப்படுவதில்லை. அவர்கள் அனாவசியங்களிலிருந்து அவசியமானதைப் பிரித்து எடுக்கும் வல்லமை அற்றவர்கள். ஆனால் சிற்பிக்கு மட்டும் அது தெரிகிறது. கல்லினுள் கலையைக் காணும் திறமை படைத்தவன் அவன்.

இதையே வேதாந்தக் கருத்தாகப் பார்க்கலாம். சிவவாக்கியர் என்னும் சித்தர் எடுத்துரைக்கிறார்.

*என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே*
*என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்*
*என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ*
*என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டெனே.*

*(யோகநிலை -6)*

பொருள்; நான் பிறவி எடுத்ததிலிருந்து, பரம்பொருள் என்னிடமே உடன் உறைந்திருக்கிறது. ஆனால் நான் அதை உணரும் சக்தி படைத்தவனாக இல்லை. தேவையற்ற எண்ணங்கள், செயல்கள், வாதங்களில்

நான் என் நேரத்தைத் தொலைத்தேன். ஆனால் ஒரு கட்டத்தில் என்னிலே இருந்த அதை உணர்ந்தேன். அது என் பிரத்யேகமான அநுபவம். அதை முழுமையாகப் பகிர இயலாது.

இதைக் கொஞ்சம் அலசலாம்.

நான் என்னுடன் இருந்தேன் - என்பது சிவவாக்கிய சித்தர் கண்டது. இது பிரத்தியக்ஷமான தர்க்கத்திற்கு எதிராகத் தோன்றலாம். நான் எப்படி என்னுடன் இருக்க முடியும்? இது பௌதிக சாத்தியமற்றதாயிற்றே! ஆனால் இந்த நான் என்னும் ஆத்மா ஞான விசாரத்தில் ஈடுபடும்போது, சரீர-இந்திரிய சேர்க்கையால் உண்டாகும் இந்த உடல் சம்பந்தப்பட்ட செயல்களைத் தானே ஒரு வெளி ஆளாகப் பார்க்கிறது. அப்பொழுது அதற்கு இந்த அழியக்கூடிய உடல், தான் இல்லை என்ற அறிவு உண்டாகிறது. எப்படி சிற்பி கல்லில் மூர்த்தியைக் காண்கிறானோ, அதைப்போல இவனும் தனக்குள்ளே இருக்கும் ஆனந்த மயமான பிரம்ம சொரூபத்தைப் பார்க்கிறான். உடல் என்னும் கட்டு அல்லது பந்தம் விலகுகிறது. மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ற அவன் ஞானியாகிறான். சரீரம் என்ற அமைப்புக்குள் இருந்தாலும் அவன் தன்னை அதிலிருந்து வேறாக உணர்கிறான். இதற்கு அவன் பெற்ற பலவித அனுபவமும் பெரிதும் துணை போகிறது. இதனால்தான் சிவவாக்கிய சித்தர், 'என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டெனே' என்று முடிக்கிறார். சிவபோக சாரமான வரிகள். உலக வாழ்க்கையில் உழன்று கொண்டேதான் ஞானத்தையும் பக்தியையும் பெற வேண்டும். அந்த நிலை எட்டாதவர்கள் இன்ப-துன்ப இருவினைகளைக் கடக்காதவர்.

நான் என்னை உணர்கிறேன் என்பது ஒவ்வொருவருக்கும் பிரத்யேகமான ஒரு அநுபவம். இதைப் பிறருக்கு விளக்கலாம். ஆனால் அவர்கள்

எல்லோரும் அதை உணருவார்கள் என்று சொல்ல முடியாது. குறிப்பாக ஞான மார்க்கத்துக்கு இது பொருந்தும். இது ரமண பகவான் வாக்கிலும் காணலாம். உந்தி பறத்தல் என்னும் பெண்டிர் விளையாட்டுப் பாடல் முறையில் அமைந்த உபதேச வுந்தியார் என்னும் அற்புத நூலில் அவர் வரிகளில் ‘நான்’ என்பதின் சொல்லாழத்தைக் காணலாம்.

*‘நான் என்று எழுமிடம் ஏது என நாட உள்*
*நான் தலைசாய்ந்திடும் உந்தீபற*
*ஞான விசாரமிது உந்தீபற. (பாடல் 19)*

சாதகன் தன் முயற்சியால் நான் என்பதை இரு நிலைகளாக உணர்கிறான். அவனுடைய ஞானமயமான ‘நான்’ உயர்நிலை. இந்திரிய வசப்பட்டு, சரீரத்துடன் இணையும் ‘நான்’ கீழ்நிலை. ஞான விசாரத்தால் அந்த ‘ஈகோ’ நிரம்பிய ‘நான்’ ஒழிகிறது. இதை ‘உள் நான் தலை சாய்ந்திடும்’ என்று விளக்குகிறார் பகவான். அந்த உயர் நிலை ‘நான்’ பரத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொள்கிறது. இந்த உயர்நிலையை அடைந்த சாதகன், இந்திரிய மயமான நானைப் புறம் தள்ளுகிறான். அவனே பரம்பொருள் என்று உணரும்போது, அவனைத் தாண்டி இந்த அழியும் உடல் ஒரு தேவையற்ற ஒன்றாகிறது.

டி. எஸ். எலியட் என்னும் மேனாட்டு தத்துவவாதி இதை அழகாகச் சொல்கிறார்,

*We shall not cease from exploration*
*And the end of all our exploring*
*Will be to arrive where we started*
*And know the place for the first time.*

பொருள்; விசாரம் செய்துகொண்டே இருத்தல் அவசியம். இறுதியில் நாம் ஆரம்பித்த இடத்தையே திரும்பவும் அடைவோம். ஆனால் அது புதிதாக அறியும் இடமாக இருக்கும்.

இந்தக் கருத்து நாம் காலங்காலமாகக் கூறிவரும் ஆத்ம தத்துவத்தின் மேலை நாட்டு வடிவம். பரம்பொருளின் அம்சமாக அவனிடத்திலேயே ஆனந்த வடிவமாக நாம் இருந்தோம். உலக சுழற்சியால் இங்கு வருகிறோம். பாப வினைகளால் இந்த உலகில் பலவித பிறவிகளைப் பெற்றோம். இறுதியில் நல்வினைப் பயனாக இந்த உலக பந்தம் விலகி, அவனையே அடைகிறோம். நாம் முன்பு இருந்த இடம்தான் அது. ஆனால் புதிது போலத் தோன்றுகிறது. ஏன்?

நம் கரும வினைகள் காரணமாக நாம் நம்மையே இழந்து விட்டோம். நம்முடைய இயல்பான ஆனந்த சொரூபம் மறைகிறது. இந்த மறைத்தலும் இறைவனின் விபூதியே. இதற்கு 'திரோதானம்' என்று பெயர் இட்டு, அது காத்தல்-அழித்தல் போன்ற இறைவனின் ஐந்தொழிலில் ஒன்றாகப் பார்த்தது நம் சித்தாந்தம். இறுதியில், கடும் முயற்சியால் நம்மை நாமே உணரத் துவங்குகிறோம். நம்மைப் பிரித்த மாய வலை விலகுகிறது.

இந்தப் புது உலகம் முன்பு நாம் இருந்த இடம்தான். ஆனந்தமயமான ஒளிமயமான ஓர் உண்மை வடிவம் நாம் என்று உணர்கிறோம். அந்த ஒளி எங்கிருந்து கிடைக்கிறது? அதுவும் பரம்பொருளின் ஒளியே. நாம் அதன் பிரதிபலிப்பு.

'தமேவ பாந்தம் அநுபாதி சர்வம்
தஸ்ய பாஸா சர்வமிதம் விபாதி'

என்பது உபநிஷதம் கண்ட இந்த உண்மை.

இதுவே தத்துவம். இந்த சொல்லைப் பிரித்துப் பாருங்கள். தத் (அது) + த்வம் (நீ) = தத்வம். சின்ன இரு வார்த்தைகளில் சீவாத்ம-பரமாத்ம தத்துவம் முழுவதும் விளக்கப் படுகிறது.

இந்த ஞானம் கைகூட விடாமுயற்சி தேவை.

இதைத்தான் சிவவாக்கியர் 'இருந்திருந்து' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறார்.

மேலைநாட்டு எலியட்டும் *We shall not cease from exploration* - இந்தத் தேடலை நாம் நிறுத்தக் கூடாது என்று வலியுறுத்துகிறான்.

முன்பு நாம் தைத்திரீய உபநிஷதத்தில் ப்ருகு என்னும் இளைஞனைப் பார்த்தோம். பிரம்ம நாட்டம் உடைய அவனைத் திரும்பத் திரும்ப பிரம்மத்தை நோக்கித் தவம் செய்ய அவன் தந்தை வற்புறுத்துகிறார். அவனும் முயற்சியைக் கைவிடாமல் தவம் இயற்றுகிறான் (ஸ தபோ தப்யத। ஸ தபஸ்தப்த்வா॥) இறுதியில் அவன் ஞானத்தைப் பெறுகிறான்.

ரமணப் பெருமானும் இதை ஞான விசாரம் என்றே அழைக்கிறார்.

> *குரு: ஐயாயிரம் காலத்திற்கு முந்திய உபநிஷதமும் இடைக்காலத்தைச் சேர்ந்த சிவவாக்கியரும், சமீபகால எலியட் மற்றும் ரமணரும் - மேலை நாட்டு தத்துவமும் கீழை நாட்டு சித்தாந்தமும் - சமஸ்கிருதம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற மும்மொழிகளும் - ஒரே கருத்தை வலியுறுத்துகின்றன என்பது சிந்தனைக்குரிய விஷயம் அல்லவா!!*
>
> *சிஷ்யர்கள்: அதுதான் 'நீயே அது' என்ற தத்துவம் என்று அறிகிறோம். மிகக் கடுமையானது என்று நாங்கள் நினைத்த ஒரு உண்மை புலனாகிறது. நன்றி.*

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### *20. சதாசிவம்*

*குறள் 191: பத்துத் திசையும் பரந்த கடலுலகும்*
*ஒத்தெங்கும் நிற்குஞ் சிவம்.*

*பொருள்: எட்டுத் திசைகளும், மேல், கீழ் ஆகியவைகளும் சேர்ந்து பத்துத் திசைகள் ஆயின. உலகெலாம் உள்ள ஸ்தூல சூக்ஷ்ம வடிவுகள் அனைத்திலும் சிவம் வியாபித்து நிற்கின்றது.*

*ஒப்புநோக்குக:*

*பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்*
*பரந்ததோர் படர்ஒளிப் பரப்பே*
*நீர்உறு தீயே நினைவதேல் அரிய*
*நின்மலா நின்அருள் வெள்ளச்*
*சீர்உறு சிந்தை எழுந்ததோர் தேனே*
*திருப்பெருந் துறைஉறை சிவனே*
*ஆர்உறவு எனக்குஇங்கு ஆர்அயல் உள்ளார்*
*ஆனந்தம் ஆக்கும்என் சோதீ*

*(திருவாசகம், 22.கோயில் திருப்பதிகம்-8)*

*பூமியின்மேல் உள்ள பல்வேறு உலகங்களும் இவற்றை அடக்கிய பல்வேறு அண்டங்களும் ஆகிய எல்லாப் பொருளுமாய்த் தோன்றி விரிந்ததாகிய ஒளிப் பிழம்பே! நீரில் கலந்துள்ள நெருப்பு போன்றவனே! நினைப்பதற்கு அரியதாகிய தூய சிவமே! உனதுஅருள் வெள்ளம் பாய்கின்ற என் சித்தத்தில் உண்டாகிய தேன்போன்று ஒப்பற்ற சுவை உடையவனே!*

திருப்பெருந்துறை உறையும் சிவபிரானே! உனையன்றி இவ்வுலகில் உறவாய் இருப்பவர் யார்? அயலாய் இருப்பவர் யார்? அனைத்தும் நீயே அல்லவா!" என்கிறார் மணிவாசகர்.

கரந்தசில் இடம்தொறும் இடம்திகழ் பொருள்தொறும்
கரந்துஎங்கும் பரந்துளன்

என்று இதே கருத்தை நம்மாழ்வார் திருவாய்மொழியில் எடுத்துரைக்கின்றார்.

குறள் 192: விண்ணிறைந்து நின்று விளங்கும் சுடர்ஒளிபோல்
உள்நிறைந்து நிற்கும் சிவம்.

பொருள்: ஆகாயத்தில் பூர்ணமாகி வியாபித்து நின்று விளங்குகின்ற ஆதவனின் ஒளிபோல், நமது சிதாகாசத்திலும் சிவனது அருள் ஒளி வியாபித்துள்ளது.

ஒப்புநோக்குக:

ஆதியோடு அந்தம் இலாத பராபரம்
போதம்அது ஆகப் புணரும் பராபரை
சோதி அதனில் பரம்தோன்றத் தோன்றுமாம்
தீதில் பரைஅதன் பால்திகழ் நாதமே. (திருமந்திரம், 378)

சிவமும் சக்தியும் முதலில் ஞான நிலையிலேயே இருக்கும் விருப்பநிலை மேலோயாக, படைப்பிற்குத் தேவையான இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி ஆகிய மூன்று சக்திகளும் சிவத்தில் இருந்து தோன்றித் தத்தம் தொழில்களைச் செய்ய ஆரம்பிக்கும். ஞானமும், ஆற்றலும் சேர்ந்தே செல்கின்றன. பிரபஞ்சம் செயல்படுவதற்காக சிவம் என்றும் சக்தி என்றும் கூறப்பட்டாலும் உண்மையில் அவை அனைத்தும் ஒன்றாகவே உள்ளன.

குறள் 193: ஆகமும் சீவனும் ஆசையும் தானாகி
ஏகமாய் நிற்கும் சிவம்.

பொருள்: உடல், ஜீவன் இவற்றைப் பிணைத்து இருக்கும் ஆசை அனைத்துள்ளும் சிவம் தானேயாகிக் கரைந்து நிற்கும்.

*விளக்கம்:*

*இதையே ஞானசம்பந்தப் பெருமானும் கூறுகிறார்:*

***ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒண் சுடர்***
***ஞானவிளக்கினை ஏற்றி, நன் புலத்து***
***ஏனை வழி திறந்து, ஏத்துவார்க்கு இடர்***
***ஆன கெடுப்பன அஞ்சு எழுத்துமே.***

*(பஞ்சாக்கரத் திருப்பதிகம்)*

*உயிரின் இயக்கம் நடந்துகொண்டு இருக்கும்பொழுது இந்த ஊனுடம்பில் பிராணாயாமம் மூலம் பிராணனை ஒடுக்கி, அந்த யோகக் கட்டுப்பாட்டின் மூலம் இதயத்தில் ஞானதீபத்தை ஏற்றி, சஹஸ்ராரத்துக்கு செல்லும் வழியைத் திறந்து, இந்த யோக சாதனையின்போது ஏற்படும் தடைகளை எல்லாம் இறைவனது பஞ்சாட்சர ஜபமே நீக்க வல்லது என்கிறார் ஞானசம்பந்தர்.*

*குறள் 194: வாயுவாய் மன்னுயிராய் மற்றுஅவற்றின் உட்பொருளாய்*
*ஆயும்இடம் தானே சிவம்.*

*பொருள்: உடலுள் பத்துவிதமான வாயுக்களாலும், மனமாயும், உயிராயும், இன்னும் அவற்றினோடு கலந்திருக்கும் கலைகள் ஆகவும் ஆய்ந்து அறியும்போது அந்தப் பிரணவ நாதத்து உச்சியில் சிவம் ஒளிவிடும்.*

*விளக்கம்:*

*இந்தத் தொடர்பை திருமந்திரம் விளக்குகிறது.*

***உணர்வும் அவனே உயிரும் அவனே***
***புணர்வும் அவனே புலவி அவனே***
***இணரும் அவன் தன்னை எண்ணலும் ஆகான்***
***துணரின் மலர்க்கந்தம் துன்னிநின் றானே.***

*(ஒன்பதாம் தந்திரம், 22. சிவதரிசனம்-2)*

*ஒரு மலர்க்கொத்தில் மணம் ஒன்று இணைந்தே இருப்பதுபோல் சிவம் என் உணர்வாயும், உயிராகவும்,*

என்னோடு ஒன்றிணைந்து நிற்கிறான். அதேசமயம் எனக்கு அயலாய் இருப்பதுபோல் தோன்றி, நான் மகிழத் தன்னைத் தருபவனும் அவனே. இணைப்பின் இறுதியில் முகிழ்தரும் பேரின்பமும் அவனே. யார் இங்ஙனம் என்னைப் பெருமகிழ்ச்சியில் அமிழ்த்துபவன் எனச் சிந்தித்தால் சிந்தனைக்கு எட்டாமல் உள்ளான் சிவன்.

தாயுமானவரும் இந்தக் கருத்தினையே பாடுகிறார்.

அங்குளங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடுநிறைந்ததுஎது தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்குஇச்சை வைத்துஉயிர்க்கு உயிராய்த்
தழைத்ததுஎது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதுஎது சமயகோ டிகள்எலாம்
தம்தெய்வம் எம்தெய்வம்என்று
எங்கும் தொடர்ந்துஎதிர் வழக்குஇடவும் நின்றதுஎது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எதுஅது
கங்குல்பகல் அறநின்ற எல்லையுளது எதுஅது
கருத்திற்கு இசைந்ததுவே
கண்டன எலாம்மோன உருவெளிஅ தாகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம்.

இதுவே பகவான் ரமணர் கூறும் இறுதிநிலை சுத்த மௌனம்.

குறள் 195: எண்ணிறந்த யோனி பலவாய்ப் பரந்தெங்கும்
உள்நிறைந்து நிற்கும் சிவம்.

பொருள்: கணக்கற்ற பிறவிகளில் பல்வேறு ஆகி, எங்கும் பரவி உடலுள் நிற்கும் சிவம்.

விளக்கம்: புல் ஆகி, பூடு ஆகி, புழுவாய், மரமாகி, பல்விருகம் ஆகி, பறவையாய், பாம்புஆகி, கல்ஆய்,

மனிதராய், பேய்ஆய், கணங்களாய், வல்லசுரர் ஆகி, முனிவர்ஆய், தேவராய், செல்லா நின்ற இத்தாவர சங்கமம் எனப் பல்வேறு பிறவிகளை எடுத்துக்கூறுகிறார் மாணிக்கவாசகர்.

குறள் 196: ஒன்றேதான் ஊழி முதலாகிப் பல்உயிர்க்கும்
ஒன்றாகி நிற்கும் சிவம்.

பொருள்: மூலவித்தாகி, அதிலிருந்து கிளர்ந்து எழும் எல்லா உயிர்கட்கும் ஒரே உயிராய் நிற்கும் சிவன்.

விளக்கம்: பகவத் கீதை 75ஆவது அத்யாயம் (17ஆவது சுலோகம்) பகவான் கிருஷ்ணர் கூறுகிறார்: "நானே அனைத்தையும் கடந்த பரவஸ்து. நான் இப்படைப்புகள் அனைத்திலும் ஊடுருவி, அனைத்தையும் தாங்குபவனாகவும் உள்ளேன். நான் புருஷோத்தமன் எனப்படும் அனைத்தையும் கடந்த பரமாத்மா."

குறள் 197: மூலம்ஒன் றாகி முடிவுஒன்றாய் எவ்வுயிர்க்கும்
காலமாய் நிற்கும் சிவம்.

பொருள்: எல்லா உயிர்க்கும் மூலம் விந்து. விந்து வெளிவந்தால் முடிவு. மூலத்திற்கும், முடிவுக்கும் இடையே காலம் உள்ளது. இவை மூன்றற்கும் விந்துவே ஆதாரம். இந்தத் தோற்றச் சக்தி சிவத்தை ஆதாரமாய்க் கொண்டது.

குறள் 198: மண்ணில் பிறந்த உயிர்க்கெல்லாம் தானாகி
விண்ணகமே ஆகும் சிவம்.

பொருள்: பூமியில் தோன்றும் உயிர்கட்கு எல்லாம் சிவனே உயிர்க்கு உயிராகி சிதாகாசகத்தில் அதிர்வாய் ஒலிக்கிறார்.

குறள் 199: தோற்றமது வீடாகித் தொல்லைமுதல் ஒன்றாகி
ஏத்தவரும் ஈசன் உளன்.

பொருள்: (தொல்லை=பழமை) ஆரம்பகாலம் தொட்டு அனைத்தையும் தோற்றுவிக்கும் விதையாகிய விந்து,

உடலோடு கலந்து உள்ளது. அதனை ராஜயோகப் பயிற்சியின் மூலம் பிரித்து மேலே சுழுமுனை நாடிமூலம் செலுத்த அதுவே சிவத்தில் ஒடுங்குகிறது. இதுவே ராஜயோகத்தில் "ஊர்த்வ ரேதஸ்" எனப்படும். இதுவே யோகத்தின் இறுதிநிலை.

இதையே திருமந்திரம் விளக்குகின்றது.

தானே திசையொடு தேவரு மாய்நிற்கும்
தானே உடல்உயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே கடல்மலை ஆதியு மாய்நிற்கும்
தானே உலகில் தலைவனும் ஆமே.

(இரண்டாம் தந்திரம், காத்தல்-2)

நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் இதனை அழகுறக் கூறுகிறார்:

திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவைதொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்துஎங்கும் பரந்துஉளன்
சுடர்மிகு சுருதியுள் இவைஉண்ட சுரனே (1-1-7)

திருவாசகமும்,

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளர்ஒளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே

என்று கூறுகிறது.

குறள் 200: நிற்கும் பொருளும் நடப்பனவும் தானாகி
உற்றெங்கும் நிற்கும் சிவம்.

பொருள்: இயங்குபவை (ஜங்கமம்) இயங்காமல் நிற்பவை (ஸ்தாவரம்) ஆகிய எல்லா அண்டங்களில் உள்ள அனைத்து படைப்புக்களாகி சிவமே நிலைபெற்று நிற்கிறது.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

**மௌனிசாது**
**மொழிமாற்றம்: ராம் மோஹன்**

## 28. மகரிஷியின் கண்கள்

பகவான் வீற்றிருக்கும் கூடத்தில் தரிசன சமயத்தின்போது, வழக்கமாக எனக்கும் பகவான் சோபாவிற்கும் இடையே ஒருவரும் அமர்ந்து இருப்பதில்லை. எனவே எந்த இடையூறுமின்றி என்னால் அவரது எழில் நயனங்களை ஆழ்ந்து நோக்க முடியும். அந்தக் கண்கள் வழக்கமாக நான் அமர்ந்திருக்கும் திசையின் நேராக எந்தக் குறிப்பிட்ட இலக்குமின்றி நோக்கிக்கொண்டு இருக்கும். ஆரம்ப நாட்களில் பகவானின் வதனத்தை நேரில் ஆழ்ந்து நோக்க எனக்கு அச்சமாக இருந்தது.

இந்தத் தயக்கம், ஒருவேளை நாகரீகமாக வளர்க்கப்பட்ட ஒருவன் பிறரது கண்களைக் கூர்ந்து நோக்கக்கூடாது என்ற உலக நடைமுறையின் சுவடாக இருக்கலாம். இன்னொரு காரணமும் இருக்கக்கூடும். அந்த நயனங்கள் சாதாரண மனிதக் கண்களைக் காட்டிலும் மிக அதிகமான எல்லையற்ற உள்மன ஆழத்திற்கு நோக்க முடியும் என்றும் என்னுடைய முழு சுயரூபமும் அந்தக் கண்களின் முன் தோலுரித்துக் காட்டப்படும் என்றும் என்னுடைய உள்ளுணர்வு என்னிடம் கிசுகிசுத்துக் கொண்டிருக்கும் என்பதாம்.

கத்தோலிக்க குருமார்களின் முன்னர், ஆரம்பத்தில் எப்படி ஒரு கத்தோலிக்கர் பாவமன்னிப்பு கோரக் கஷ்டப்படுகின்றாரோ அதுபோன்று என்னுள் இருந்த

அச்சம் இருந்தது. இந்தத் தயக்கம் நீங்க சிலகால இடைவெளி தேவைப்பட்டது.

ஆயினும் இந்தக் கூச்சத்தை நீக்க முயற்சி எடுத்துதான் ஆக வேண்டும் என்பதை உணர்ந்தேன். சிலவாரங்களில் எல்லாத் தடைகளும் நீங்கின. மகரிஷியுடன் நான் கொண்ட உள்ளார்ந்த தொடர்பில் இந்தக் குறை நீக்கம் பழக்கமானது. மௌனம் நிறைந்த அதேசமயம் ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்த, தினசரிப் பயிற்சியினால் வரும் ஒளிவுமறைவற்ற மனநிலை நான் கற்க வேண்டி இருந்தது. ஏனெனில், இந்தப் பண்பில்லாமல் ஆசாரியனிடம் நேரடியாகச் சரண் அடைதல் இயலாது.

மகரிஷியின் கண்கள் எப்போதும் ஒன்றேபோல் உள்ளன. சாமான்ய மனிதர் போல், உணர்ச்சிப் பெருக்கு அல்லது எண்ணங்களின் வெளிப்பாட்டினால் ஏற்படும் மாறுபாடுகளை நான் எப்போதும் கண்டதில்லை. ஆனால் இதற்கு, அக்கண்களில் உயிரொளி இல்லை என்று தவறாகப் புரிந்து கொள்ளதீர்கள். இதற்கு எதிரிடையாக ஒளியும் உயிரும் அக்கண்களில் இருந்து இடையறாது பாய்ந்துகொண்டே இருக்கும். அக் கண்களைக் கண்டிராதவர்கட்கு அவற்றின் ஆழமும் கம்பீரமும் கற்பனை செய்து பார்க்கக்கூட இயலாது. அந்தக் கரிய, பெரிய விழிகள் எப்போதும் பிறங்கொளி கொண்டு ஜொலித்துக் கொண்டே இருக்கும். அவரது புகைப்படங்களில் கூட இந்த அபூர்வமான கண்ணொளியைக் கூர்ந்து நோக்குபவர்கள் உணர்வர். அதன் ஆழ்பொருள் என்னவென்று அவர்கள் அறியாமல் இருந்தாலும் ஜ்வலிக்கும் அந்தப் பேரொளியால் அவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க இயலாது.

சாந்தியும் சக்தியும் இனிமையும் நிரம்பிய ஒரு பேராறு இக்கண்களில் இருந்து பெருகி விடுகிறது. அவற்றை நோக்குபவர்கள் தம் பல வினாக்கள், கோளாறுகள், உள்ளார்ந்த தொல்லைகள் அனைத்தையும்

ஐயம்திரிபற உணர்ந்த அவ்விழிகள் ஒளிர்கின்றன. என்னைப் பொறுத்தவரை அவ்விழிகளில் மஹா மாயையின் பிடியில் சிக்கி வேதனையுறுபவர் தமக்குச் சலுகை காட்டுகின்ற ஒரு நுண்ணிய புன்முறுவலை நான் காண்கிறேன். எதேச்சையாக நான் கூடத்தில் அமர்ந்துள்ள ஏனையோரின் கண்களை நோக்கும்போது மகரிஷியின் கண்களில் கூடர்விடும் ஒளியின் பல்லாயிரத்தின் ஒரு அம்சத்தைக்கூட மற்றையோர் கண்களில் காண முடிவதில்லை. ஒப்பு நோக்கும்போது அவை உயிரிழந்தவையாகக் காணப்படுகின்றன. அத்தகைய ஒப்பீடு தவறு என்றும், ஏனையோர்மீது தீர்ப்பளிக்கும் உரிமை எனக்கு இல்லை என்று நான் உணர்ந்தபோதும், என்னால் இவ்வுணர்வை இப்போது கட்டுப்படுத்த இயலவில்லை. ஒவ்வொருவரும் உண்மையில் தான் யாராக இருக்கிறோமோ, அவனாகவே தோற்றமளிக்கிறான். அதற்கு அதிகமாகவோ, குறைவாகவோ நிரந்தரமாக பொய்த் தோற்றம் அளிக்க இயலாது. நம் ஒவ்வொருவருள்ளும் ஒரே உயிர்தான் உள்ளது. அறிவுபூர்வமாக நான் இந்த உண்மையை ஏற்றுக்கொண்ட போதிலும், பகவானின் கண்களைப் பார்த்துவிட்டு மற்றையோரின் கண்களை நோக்கும்போது, இந்த மிகப் பெரும் வேறுபாட்டினை காண்பதை என்னால் உணராமல் இருக்க இயலவில்லை.

தீவிர ஆத்ம விசாரம் செய்து நான் என்ற தன்முனைப்பை நான் அழிக்கும்வரை இந்த வேறுபாடு காணும் எண்ணம் என் மனதில் இருந்துகொண்டே தான் இருக்கும்.

நம்முடைய கண்ணுக்கு ஓர் உயிர் எவ்வளவு இழிவாகத் தோன்றிடினும் உண்மையில் பரமாத்மா எல்லா ஜீவர்களிலும், எல்லாப் பொருட்களிலும் உள்ளுறைந்து இருக்கிறது அல்லவா? அவன் தாவரத்திலும், புழு பூச்சியிலும், பாம்பிலும்,

*விலங்கிலும் மனிதரிலும் அந்தர்யாமியாக உள்ளான். அவன் எந்த அளவில் தனது பரமாத்ம தத்துவத்தை ஒவ்வொரு உயிரிலும் வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறான் என்பதில்தான் வேறுபாடு உள்ளது. இந்தப் பூர்ணத்தின் வெளிப்பாட்டின் ஒரு மிகச் சிறிய பகுதியே நம் உணர்வுக்குப் புலப்படுகிறது. அதன் வெளிப்பாட்டின் மிக உயரிய நிலைகள், எல்லைக்குள் அடங்கிய நம் ப்ரக்ஞை நிலையைக் கடந்து நிற்பவை. ஆயினும், நம் புலன் உணர்வுகளின் இறுதி எல்லையில் மற்ற ஏதோ ஒன்று இறைவனின் ஆழ்ந்த நோக்கினைப் பிரதிபலிக்கின்றது.*

*என்னுடைய ப்ரக்ஞையில் இப்போது ஒரு சக்தி வாய்ந்த புதிய பேருணர்வு கிளர்ந்து எழுகிறது. மாறிக்கொண்டே இருக்கின்ற எண்ண அலைகளைத் தாண்டி, ஒரு பெரிய எதிர்பார்ப்புடன் என்னுடைய ப்ரக்ஞையுடன் நான் ஒன்றுகிறேன். இடைவிடாது முயல்க; நீ விடையைக் காண்பாய் என்ற ரகசிய நிலையை நான் என்னுள் கேட்கிறேன். திடீரென என்னுள் ஓர் பேரொளியை உணர்கிறேன். அது ஒரு ஒரு சக்தி வாய்ந்த மின்னல்போல் என்னுள் பீறிடுகிறது. நான் கண்ட இந்தப் பேருண்மையின்முன் ஒரு சில காலம் பொறிகலங்கி நிற்கிறேன்.*

*இதனை வார்த்தைகளால் பிறர்க்கு எடுத்து உரைக்க இயலாது. ஆயினும் மகரிஷியின் விழியின்மூலம் நோக்குவது யார் என்பதை நான் அறிவேன் என என்னால் இப்போது உறுதியுடன் கூற இயலும்.*

*[கரிய வாகிப் புடை பரந்து மிளிர்ந்து*
*செவ்வரியோடி, நீண்ட அப்*
*பெரிய வாய கண்கள் என்னைப்*
*பேதைமை செய்தனவே. (அமலனாதிபிரான், பாடல்-8)*

*என்னும் திருப்பாணாழ்வாரின் பாடலை இப்பகுதி நினைவூட்டுகிறது அல்லவா? ஆசிரியர்]*

# யாவர்க்குமாம் ரமணன்; யாவர்க்குமாம் ரமணாச்ரமம்

**D. தியாகராஜன்**

*'தாயிற் சிறந்த தயாவான தத்துவனாய்' பல்லுயிர்களையும் நித்தமும் காத்தருளும் பகவான் ரமண மகரிஷிகளை முருகனார் ரமண புராணத்தில் 'தாயிற் சிறந்த பெருந் தண்ணளியா லாட் கொண்டாய்' என்று பாடுகிறார். எவ்வாறு ஒரு தாய் தனது அனைத்து குழந்தைகளையும் எந்த வேறுபாடும் காட்டாது ஒரே அன்போடு அரவணைத்துப் பாதுகாக்கிறாளோ அவ்வாறே ரமணரும் தன்னை நாடி வரும் உலகம் முழுவதும் உள்ள அனைத்துயிரையும் வசுதேவ குடும்பகமாக வாரி அணைத்துச் செல்கின்றார். அவரது பெருங்கருணையானது எந்த ஒரு வரையறையோ கட்டுப்பாடுகளோ இல்லாது யாவர்க்குமாம் என்று உணர்த்தும் வண்ணம் உள்ளது. அவரது ஒளி பொருந்திய வாழ்வில் பல்வேறு நிகழ்வுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை இங்குக் காண்போம்.*

*அதிகாலையில் மலைக்கு மேலே சென்று தமக்கு வேண்டிய விறகுகளையும், புல்கட்டுகளையும் சுமந்து கொண்டு நடுப்பகலில் கீழே இறங்கி வரும் ஏழை எளிய பெண்களுக்கு கோடை வெயிலின் தாக்கத்தில் இருந்து மீள்வதற்கு பகவானிடம் குளிர்ந்த நீரை தமது உடலில் ஊற்றச் சொல்வர். தாகத்தைத் தணித்துக் கொள்வதற்கு நீரைக் கைகளில் ஊற்றச் சொல்லி பருகுவர்.*

*பகவான் மலைமீது இருந்தபோது அவரைத் தமது விளையாட்டுத் தோழனாகக் கருதிய குழந்தைகள்*

*சிலர் விளையாட வருவர். அச் சிறார்கள் தமது உடைந்த பொம்மைகளைக் கொண்டு வந்து சரிசெய்து கொடுக்குமாறு கேட்கின்றனர். பகவான் அந்தப் பொம்மைகளை சீர் செய்து கொடுக்கிறார்.*

*தாய்க் குரங்கு ஒன்று புதிதாகப் பிறந்த தனது குட்டியை பகவானிடம் கொண்டு வந்து காண்பித்துச் செல்லும். குரங்குகளின் அரசனாகப் பதவியேற்ற குரங்கும் பகவானிடம் தனது பதவியேற்பினை அறிவித்துச் செல்லும்.*

*அண்ணாமலையில் காட்டுப் பாதையில் திரிந்து கொண்டிருந்த பகவானை சுள்ளி பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு வயதான மூதாட்டி திடீரென்று பகவானை நோக்கி, 'உன்னைப் பாடையிலே வைக்க! இருந்த இடத்திலே சும்மா இல்லாது முள்ளிலும் கல்லிலும் வெயிலிலும் ஏன் இப்படித் திரியணும்!' என்று வசவு சொல்லால் அறிவுறுத்தலும் செய்வாள்.*

*பெண்ணுக்குத் திருமணம், குழந்தை வேண்டி, வேலை கிடைக்க இப்படிப் பல தேவைகள்/ வேண்டுதல்களை அன்பர்கள் பகவானிடம் சமர்ப்பிக்கின்றனர்.*

*ஆச்ரமத்திற்கு வந்த கள்வர்களிடம் அடியை வாங்கிக் கொண்டு அவர்களை மன்னித்தும் அருளுகின்றார்.*

*பிணத்தைச் சுமந்து சென்று கிரியைகளை முடித்த பின்னர் பசியுடன் உணவு வேண்டி ஆச்ரமம் வந்தவர்களுக்கு ஆச்ரமத்தில் உணவளிக்கப்படுகின்றது.*

*ஒரு தாய் தன்னுடைய குழந்தையை பகவானிடம் கொண்டு வருகிறாள். பகவானுடைய புன்னகை குழந்தைமேல் பதிகிறது. குழந்தை சிரிக்கின்றது.*

*அணில்கள் தங்களுக்கு முந்திரி வேண்டுமென்று அவரிடம் முறையிட்டுப் பெற்றுச் செல்கின்றன.*

*மற்றொரு பெண்குழந்தை தன்னுடைய பொம்மையைக் கொண்டுவந்து அதைப் பகவானுக்கு முன்னால் நமஸ்காரம் செய்ய வைக்கிறாள். பிறகு அதைப் பகவானிடம் கொடுக்கிறாள்.*

*இச் சாமானிய மக்கள் மட்டுமா? உயர்ந்தோர் பலரும் பகவான் திருமுன் ஒன்று படுகின்றனர்.*

*ஜடாமுடியுடன் காஷாய உடையணிந்து ஒரு சந்நியாசி உள்ளே வந்து பகவானுக்குமுன் தன் இரு கைகளையும் தூக்கி வணங்கி நிற்கிறார்.*

*மேற்கத்திய அன்பர்கள் பலர் ஆச்ரமம் வந்து வினயத்துடன் பகவானை நமஸ்கரிக்கின்றனர்.*

*மேற்கண்ட நிகழ்வுகள் பகவான் அன்றாட சரித நிகழ்வில் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகளாகும்.*

*பகவான் ரமண மகரிஷிகள் மலைமீது இருந்தபோதும் தற்போதைய ரமணாச்ரமத்தில் தேகத்துடன் இலங்கிய நாட்களிலும் எப்போதும் நிலவும் அவர் சாந்நித்தியத்திலும் எண்ணற்ற மக்கள் மட்டுமன்றி மாக்களும் அவரது அருளை நாட விழைகின்றனர். அவரை அணுகி அவரவர் சுக துக்கங்களை பகவானிடம் பகிர்ந்து கொள்கின்றனர்.*

*அந்நாட்களில் பகவானிடம் வந்தால் ஏதேனும் உணவு கிடைக்கும் அல்லது உதவி கிட்டும் என்ற எண்ணத்துடன் எளிய மக்கள் வந்தனர். பகவானை வெறுமனே வேடிக்கை பார்க்கவும் வந்தவர் சிலர். கற்றறிந்தும் வினயமில்லாதவர்கள் சிலர் சுவாமிக்கு ஏதாவது தெரியுமா என்று அறிய அவரைப் பரிசோதிக்கவும் வருவர்.*

*சந்நியாசிகளைத் தரிசிக்கும் வழக்கம் உள்ள, பக்தியுடன் கூடிய பாமர மக்கள் பலர் உலக பந்தங்கள்*

இல்லாமல் மௌனமாக மலைமீது அமர்ந்திருக்கும் ரமணரைக் காண வருவர்.

குழந்தைகள் பகவானை தமது சக விளையாட்டுத் தோழனாகப் பாவித்து அவருடன் விளையாடி மகிழ்ந்தனர்.

ஏனைய பிற ஜீவராசிகளும் அவரிடம் பிரியமாக அணுகி அவைகளின் குறைகள் நீங்கப் பெறுகின்றன.

இறுதியாக வேதாந்த நூல்களைக் கற்றுத் தமக்கு ஏற்பட்ட ஐயங்களை நீக்கிக்கொள்ள வந்த ஆன்ம சாதகர்கள் இவற்றுள் அடங்குவர். வெறும் நூலறிவு என்பது ஒளியுமில்லா இருளுமில்லா காலசந்தியைப் போன்றது. வெற்று நூலறிவால் விளைந்த அறிவையும் ஐயத்தையும் கொண்ட இவ்விறுதி வகையைச் சேர்ந்தவர்கள் ஜீவன்முக்தி நிலையை அடைந்த சுவாமியிடம் அருள் மொழிகளைக் கேட்க விழைந்தனர்.

இப்படிப் பலதரப்பட்ட ஜீவராசிகளின் பல வகையான சந்தேகங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்து வரும் பகவான் ரமண மகரிஷிகளின் தனித் தன்மையை கோஹன் தனது நினைவுகளில் இவ்வாறு விவரிக்கின்றார்.

பகவான் தனித்தன்மை வாய்ந்த மனிதர். அவரிடம் எந்தவொரு தனித்தன்மையும் இல்லை அதுவே அவரது தனியான குணம். சாதாரணமாக ஆச்ரமம் வருபவர்களுக்கெல்லாம்கூட பகவானது இயல்பான குணம் அவர்களுடைய கவனத்தைக் கவரும். தான் ஏதோ அசாதாரணமானவன், மனிதருக்கெல்லாம் அப்பாற்பட்டவன் என்று மற்றவர்கள் நினைக்க வேண்டும் எனஅவர் நடந்து கொண்டதில்லை.

ரமணரிடம் எந்தவொரு செயற்கைத் தன்மையும் இல்லை. ஞானத்தின் உச்சத்தை அடைந்து அந்த அனுபவத்தில் நிரந்தரமாக ஊறியிருப்பவர்களுக்கு

செயற்கைத் தன்மையெல்லாம் தேவையில்லை. அவர் எப்போதுமே மிகவும் சாதாரணமான முறையிலேயே நடந்து கொள்வார். அங்கு வருபவர்களுக்கு பகவான் ஏதோ அசாதாரணமானவர் என்று நினைப்பதற்கு காரணமே இருக்காது.

ஆனால் ஒரு தடவை அவர் முன்னால் ஒருவன் இருந்தாலே வெளியில் இருந்து எந்தவொரு தூண்டுதலும் இல்லாமலேயே தன்னுடைய இதயத்தில் அவனுக்கு அத்வைத சத்தின் முன்னால் இருக்கிறோம் என்ற நினைப்பு வந்துவிடும். பகவான் முன் உட்கார்ந்தவர்களுக்கெல்லாம் இந்த அனுபவம் ஏற்படும்.

எல்லோருக்கும் அவர் ஒரு திறந்த புத்தகமாக இருந்தார். தனி வாழ்க்கை, பொது வாழ்க்கை என்ற பாகுபாடு அவருக்கு இல்லை.

எவரும் எந்தச் சமயத்திலும் உள்ளே வரலாம். மனிதர்களுக்கு மட்டுமல்லாது மிருகங்கள்கூட அவரிடம் செல்லலாம். அணில்கள் அவரிடம் விளையாடும். பசு லட்சுமி சௌகரியப்படும் போதெல்லாம் அவரிடம் வந்துவிடுவாள். குரங்குகள் தங்கு தடையில்லாமல் ஆச்ரமத்திற்கு வந்துவிடும்.

பகவானுடைய அன்பும் அருளும் எல்லையற்றது. அவருக்கு முன்னால் உயர்வு தாழ்வு இல்லை. எல்லோரும் சமம். அந்தக் காலத்தில் அவரைக் காண வந்த மகா ராஜாக்களுக்கும் அவரைத் தரிசிக்க வந்த பாமரனுக்கும் எந்தவொரு பேதமும் காட்டப்பட மாட்டாது. வாயில்லா பிராணிகளின் மொழி அவருக்குப் புரியும். பகவான் தான் அடைந்த உன்னதமான அனுபவத்தை மற்றவர்களுக்கும் கொடுத்தார். எந்த அனுபவம் ஒரு உயிர்க்கும் மற்றொரு உயிர்க்கும் பேதத்தைக் காணோதோ அந்த அனுபவத்தை மற்றவர்களுக்குக் கொடுத்தார்.

*இப்போதும் அவரது சந்நிதியில் பலதரப்பட்ட மக்கள் பலதரப்பட்ட வேண்டுதல்களுடன் அவரை நாடி வந்த வண்ணமுள்ளனர். உலகெங்கிலும் இருந்து எண்ணற்றோர் ஆத்ம விசாரத்திற்கும் தியானத்திற்கும் ரமண சந்நிதியை நாடுகின்றனர். மன அமைதியை நாடியும் குரு தரிசனத்திற்காகவும் பொது மக்கள் ஆச்ரமத்திற்கு வருகின்றனர். சிலர் வழக்கமான ஆலய தரிசனத்திற்காகவும் உணவுப் பிரசாதத்திற்காகவும் வருகின்றனர். ஆன்மிக நாட்டமில்லாத நாஸ்திகர்கள்கூட பசிக்கு உணவிற்காகவும் மர நிழலில் சிறிது இளைப்பாறுவதற்கும் வருகின்றனர். இங்கே ஆச்ரமச் சூழலில் எவர்க்கும் பேதமில்லை. நாடிவந்தோர் அனைவர்க்கும் நலமே பயக்கிறது.*

*தண்ணீரானது எந்த நிறமும் வடிவமும் சுவையுமற்றது. ஆனால் அந்த நீர் அனைத்து ஜீவராசிகளின் தாகத்தை தீர்க்க வல்லது. எந்தப் பாத்திரத்தில் இடப் படுகிறதோ அந்தப் பாத்திர வடிவில் மாறத்தக்கது.*

*பகவான் ரமண மகரிஷிகளின் அருட் கடாட்சமும் தெளிந்த நீரைப் போன்று தனக்கென எந்த வரையறைகளோ கட்டுப்பாடுகளோ அற்று அனைத்து ஜீவராசிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார். அவரை அண்டுவோரின் தன்மைக்கேற்ப தன் வடிவையும் மாற்றிக் கொள்பவராக விளங்குகின்றார்.*

*விஸ்வநாத சுவாமி 'பூரண விழிப்பு' என்ற தமது கட்டுரையில் பகவான் ரமணரின் சிறப்பை இவ்வாறு விவரிக்கின்றார்.*

*பகவானை வந்தவடைந்தவர்கள் சிலர் தெய்வீக தாகத்தோடு வந்தனர். பகவானின் முதல் தரிசிப்பிலேயே தெய்வத்தோடு நேரடித் தொடர்பு கொண்டதை உணர்ந்தார்கள். கணபதி முனி அண்ணாமலை சாரலில்,*

ஐடை ஸ்வாமி ஆச்ரமத்தில் முதன்முதலில் பகவானைத் தரிசிக்கும்போது அவரை ஒரு சித்த புருஷராகக் கண்டார். அந்த அறிஞர் சீடரானார்.

சத்தியமங்கலம் வேங்கடராமய்யர் பகவானை எங்கும் பரவி நிற்கும் பரமாத்மாவாகப் பார்த்து, அருமையான பாடல்களை ரமண ஸ்துதி பஞ்சகமாக இயற்றினார்.

ஹம்ஃப்ரீஸ் பகவானை, தெய்வீக ஒளியின் மையமாகக் கருதினார். அச்சுததாஸர், நாராயண குரு மற்றும் பலர் பகவானைக் கண்டதும் அவருடைய ஆன்மீகப் பெருமையை அறிந்தனர். பிரெஞ்சுப் பெண்மணியான பாஸ்கலின் மாலெட் பகவானுடன் சில மாதங்கள் தங்கி பகவான் மீது ஒரே ஒளி, ஒரே வாழ்க்கை, ஒரே அன்பு, ஒரே விளக்கு உங்கள் மூலமாகப் பிரகாசிக்கிறது என்று ஆங்கிலப் பாடலை இயற்றினார். அறிஞரும் கவிஞரான கிராண்ட் டஃப் பகவானுடைய ஆங்கில மொழிபெயர்ப்பான அருணாசல ஸ்துதி பஞ்சக முகவுரையில் இவ்வாறு கூறுகிறார்: "நான் புலன்களின் எல்லையைக் கடந்து ஆத்மாவில் கலந்த ஒருவருடன் நேரடித் தொடர்பு கொண்டேன். எவ்வாறு சூரியன் இருக்கிறது என்பதை நிரூபிக்க எனக்கு எந்தவொரு ஆதாரமும் தேவையில்லை."

பகவானுடைய இந்த அரிய பெரிய அனுபவத்தை அவரைக் கண்ட அறிஞர்கள் பொதுவாக அறிந்ததின் பின்னணி என்ன? இதற்கு கணபதி முனியே சத்வாரிம்சத்தில் பதில் கூறியிருக்கிறார்: அவரே ஒரே ஆத்மாவாக எல்லா ஜீவர்களுக்கும் பின்னால் இலங்குகிறார். உடலையும் உலகத்தையும் கடந்து ஒரே சத்தாக இருக்கிறார். எனவே இந்த குரு ரமணனுக்கு முன்னால் விழுந்து வணங்கு.

சாதாரண உலகியல் நிலையிலிருந்து பார்க்கும்போது மாயையின் பிடியில் இருக்கும்


மற்றவர்களுக்கு, பகவானுடைய சந்நிதி எல்லாச் சூழ்நிலைகளிலும் மாறுபடாமல் ஆன்மாவில் அமர்ந்திருக்கும் அவருடைய நிலை விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. அவர்களுக்கு இது ஆன்மீக விசாரத்தில் விலைமதிப்பில்லாத உதவிக்கரம் நீட்டுகிறது. இம்மாதிரி ஞானிகளின் தெய்வீக சக்தி அவர் உடல் உள்ளவரைதான் இருக்கும் என்று அதற்கு ஒரு எல்லை வகுக்க முடியாது. அவருடைய சக்தி எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். அவர்களைப் பற்றி நினைத்து சரணாகதி அடைந்து, வாழ்க்கை வரலாற்றையும் உபதேசங்களையும் படித்து அதைப் பின்பற்றுபவர்கள் கண்டிப்பாக அவருடைய அருளுக்குப் பாத்திரமாகிறார்கள். அவருடைய அருள் பரம்பொருளின் அருளுக்கு வேறாக இல்லை. இதுதான் பகவான் உடல் தாங்கியிருக்கும்பொழுது அவரைத் தரிசிக்காத சாதகர்களின் பொதுஅனுபவம். அவரைப் பற்றி எவ்வாறோ கேட்டு அவர் மீது பக்தி கொண்டவர்கள் அவரால் ஈர்க்கப்படுகின்றனர்.

ஞானிகள் காலத்திற்கு அப்பாற்பட்டவர்கள். எல்லாக் காலத்திற்கும் உரியவர்கள். அவர்களுடைய இயல்பினால் சாதகர்களின் பாதைக்கு ஒளிகாட்டி பல விதங்களில் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள்.

விரூபாட்ச குகையில் இருக்கும்போது பகவான் ரமண மகரிஷிகளிடம் தாங்கள் யார் என்று அவரிடம் கேட்கப்பட்ட வினாவிற்கு,

அரி முதல் இதர ஜீவ ராசிகளின் இதயத்தில் உறையும் ஆத்மாவே அருணாசல ரமணன். அவனை உள்ளத்திலிருத்தி, பக்தி பரவசத்தால் உருகுபவர்களின் ஞான விழி திறக்கும் என்று கூறியுள்ளார்.

அரி முதல் அனைத்து ஜீவராசிகளினுள்ளும் உறையும் ரமணனுடைய அகண்ட அன்பையும் கருணையையும்



வார்த்தைகளால் வடிக்க இயலாது. தாய் தனது குழந்தைகளை அணைத்துக் காப்பதுபோல் யாவரையும் அணைத்துக் காத்து வழிநடத்துகின்றார். ஆம், பகவான் ரமணர் யாவர்க்குமானவர். அவரது ஆச்ரமம் யாவர்க்குமானது.

# ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு வைபவம்

## சிவதாஸ் கிருஷ்ணன்

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய*

*ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் ஓர் அங்கமாக இங்குக் கூடியுள்ள ரமண பக்தர்களுக்கு நமஸ்காரங்கள்.*

*பகவான் 1922-ஆம் ஆண்டு மே மாதத்தில் தன் தாயார் அழகம்மைக்கு முக்தி அளித்து ஞான நிலையில் இருத்தினார். அவ்வருடம் நவம்பர் இறுதியில் பாலி தீர்த்தக்கரையில் அமைந்திருந்த தாயார் சமாதி அருகே பகவான் தங்க ஆரம்பித்தார். அங்கிருந்த சமாதித் தலத்தில் ஏற்கனவே தினசரி பூஜைகள் நடந்து வந்தன. பகவான் வருகைக்குப் பின், சிறு குடில்கள் தோன்றத் தொடங்கின. பகவானின் அணுக்கத் தொண்டர்களும், அவருடனிருந்த பக்தர்களும் குடிசைகளில் தங்க ஆரம்பித்தனர். அன்று சிறிய அளவில் நிறுவப்பட்ட ஆச்ரமம் படிப்படியாக அடிப்படை வசதிகள் பெருக, பக்தர்குழாம் பெருக விஸ்தாரமானது. வேதபாடசாலை, கோசாலை, பாகசாலை எனக் கட்டிடங்கள் கட்டப்பட்டு பக்தர்கள் வருகையும் அதிகரிக்க பகவானைச் சுற்றி ஆச்ரம வளாகமானது பெருகத் தொடங்கியது. பின்னர் மாத்ருபூதேஸ்வரர் ஆலயம் கட்டப்பட்டு, கும்பாபிஷேகம் நடந்து பக்தர்களின் எண்ணிக்கையும் பெருகின.*

*ஸ்ரீ ரமணாலயம் டிரஸ்ட், இராஜபாளையம் சார்பாக கடந்த 21/01/2023 அன்று ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு விழா நடைபெற்றது. விழாவில் ஆச்ரம செயலர், திரு. சிவதாஸ் கிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய துவக்க உரை.*

*பகவான் தேகம் மறைந்ததும் அவருக்கும் சமாதி ஆலயம் நிறுவப்பட்டு நித்யபூஜைகள் தொடங்கி நூறு ஆண்டுகளில் படிப்படியாக வியாபித்து, நினைக்க முக்தி அளிக்கும் அண்ணாமலை சாரலில் உள்ள ஆஸ்ரமத்திற்கு வரும் பக்தர்களும், சாதகர்களும் தியானத்தில் அமரும்போது, தன்னிருப்பு இயல்பான, கஷ்டமின்றி அமைதியில் ஆழும் நிலை உள்ளதை அனைவருமே அநுபவிக்கின்றனர். ஆச்ரம நிர்வாகம் பகவானின் அருணையை எட்டிய செப்டம்பர் 1-ஆம் தேதியை நினைவில் நிறுத்தி 01/09/2022 முதல் 2023-ஆம் வருட ஜெயந்தி நாளான 28/12/2023 வரை ஆச்ரம நூற்றாண்டு விழாவாகக் கொண்டாட முடிவெடுத்தது.*

*அவ்வமயம் பல்கிப் பெருகிய ரமண பக்தர்கள் வெவ்வேறு ஊர்களில் அமைந்துள்ள மையங்களிலும் கொண்டாடி பகவானது அருளுபதேசங்களை நிலை நிறுத்த ஏதுவாக அமைய இன்று விழைந்துள்ளோம்.*

*இதை முன்னிட்டு 1) பாண்டவ தீர்த்தம் சீரமைப்பு மற்றும் கும்பாபிஷேகம் 2) பச்சையம்மன் கோயில் சீரமைப்பு, 3) அதிருத்ர யாகம் முதலியனவைகளும் நடைபெற்று வருகின்றன.*

*இன்றைய நூற்றாண்டு விழாவில் ஆச்ரம தலைவர்கள், ஆச்ரம வளர்ச்சி மற்றும் பகவானின் அருளுபதேசம் பற்றிப் பேச விழைகிறேன்.*

*ஆச்ரமத்தின் முதல் சர்வாதிகாரியாக ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமிகள் பொறுப்பேற்றார். ஆச்ரம அலுவலக அறை முதன்முதலில் நிறுவப்பட்டபோது பகவான் இவருடைய இருக்கையில் 10 நிமிடம் அமர்ந்து அருளினார். சின்னஸ்வாமிகள் தனக்கும் பகவானுக்கும் ஒரு தொடர்பு எப்போதும் இருப்பதை உணர்ந்து செயலாற்றி வந்தார்.*

அதன்பிறகு பொறுப்பேற்ற திரு.டி.என். வேங்கடராமன் என்ற வெங்குட்டு பகவானது பார்வையில் வளர்க்கப் பட்டவர். சிறுவனாக இருந்தபோது பகவான் அவருக்குப் பல் தேய்த்து விடுதல், குளிப்பாட்டுதல் போன்றவைகளைச் செய்துள்ளார்.

திரு. டி.என்.வி. பகவான் உடல் தாங்கி இருக்கும்போதே ஆச்ரமத்திற்கு வந்தவர். பகவானின் விதேக முக்திக்குப் பிறகு தன்னைச் சுற்றி 20 அடி விஸ்தீரணத்திற்கு பகவானின் அருள் தன்னைக் காக்கிறது என்பதை உணர்ந்து அதைக் கூறியும் வந்தவர். இவரின் தலைமையில் சுமார் 40 வருடம் ஆச்ரமம் பல இன்னல்களுக்கிடையேயும், பலவித வளர்ச்சிகளைக் கண்டது. பகவானுடன் வாழ்ந்த பக்தர்களுக்கு ஆச்ரமத்தில் இடமளித்து, அவர்களை இறுதிவரை பேணி வந்தார். இன்றைய ஆச்ரம அமைப்பிற்கு அஸ்திவாரம் நாட்டியது இவர்தான்.

அடுத்து வந்த சுந்தர ரமணன் என்கிற சுந்தரண்ணா 16 வயதுவரை பகவானின் நரவுடலைத் தரிசித்தவர். அவர் தலைமை ஏற்றபின் பகவானின் பூரண அருளே ஆச்ரமத்தை நடத்தி வருகிறது என்பதை உணர்ந்து தன்னை முழுமையாக பகவானிடம் அர்ப்பணித்தவர். தான் நிர்வாகத்தைக் கவனிக்க வேண்டிய அலுவல்களை மட்டுமே செய்வதாகவும் மற்றவைகளையெல்லாம் பகவான் தான் செய்கிறார் என்கிற சரணாகதி தத்துவத்தைப் பூரணமாக மேற்கொண்டவர். அவருடன் பணிபுரிய நேர்ந்த நபர்களும் அதை முழுமையாகப் புரிந்துகொள்ளக் காரணமாக இருந்தவர்.

சுந்தரண்ணாவின் தலைமைக்காலம் ஆச்ரமத்தின் பொற்காலம் எனலாம். புத்தகப் பதிப்பில் உலகத் தரம், ஆச்ரமத்திற்காக நிலங்களை வாங்கியது போன்ற பணிகள். அவரின் இரு சகோதரர்களை அரவணைத்தும்

அனுசரித்தும் ஆஸ்ரமத்தை நடத்திய பெருமை இவரைச் சாரும்.

அவரது மூத்த மகனான தற்போதைய தலைவர் டாக்டர் வெங்கட் ரமணன் (ஆனந்த் ரமணன்), தந்தையால் பகவானிடம் பக்தி பூண்டு ஒழுக சிறு வயதுமுதல் பழக்கப்பட்டு, அதில் மூழ்கி வாழுமாறு வளர்க்கப்பட்டவர். அவரும் அவர் மனைவி டாக்டர் நித்யா ராமச்சந்திரன் இருவரும் நன்கு பொளுளீட்டியும் வளர்ந்தும் வந்ததுமான மருத்துவத் தொழிலினை முடித்துக்கொண்டு ஆச்ரம பணிபுரிய வந்து, அவர்களது வாழ்க்கையை ஒரு மகத்தான வேள்வியாக அமைத்துக் கொண்டு ஆச்ரமத்தை நன்கு நிர்வகித்து வருகின்றனர்.

தற்போதைய தலைவர் மிகுந்த தொலைநோக்கு உள்ளவர். ஆச்ரமத்தைப் பலவிதங்களில் முன்னேற்ற ஆன்மிக மையத்தை நன்கு இயங்குமாறு செய்வதோடு மக்கள் தொண்டும் ஆற்ற SRM Charitable Trust என்ற தொண்டு நிறுவனத்தை அறக்கட்டளையாக நிறுவியுள்ளார்.

இவர்களின் திருமகனான அத்வைத் ரமணன் அமெரிக்காவில் Attorney ஆக பணியைத் துவக்கியுள்ள இந்நிலையிலே ஆச்ரம வளர்ச்சியையும் பற்றி தன்னுடைய ஆர்வத்தையும் துவக்கியுள்ளார். பகவானால் அர்ப்பணிக்கப்பட்ட இந்தத் தலைமுறையினர் வாழ்வாங்கு வாழ்ந்து ஆச்ரமத்தை வழிநடத்துவர் என்பதில் ஐயமில்லை. எப்படி வாழையடி வாழையாக பக்தர்கள் வளர்கின்றனரோ அப்படியே வாழையடிவாழையாக பகவானின் வழித்தோன்றல்களும் ஆஸ்ரமத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்பர் என்பது உறுதி.

அடுத்து ஆச்ரம வளர்ச்சி: சிறிய அளவிலான அடிப்படை வசதிகளுடன் கூடிய அறைகள், வைத்தியசாலை, கோசாலை, வேதபாதடசாலை,

நாராயண சேவை, பக்தர்களுக்கு அன்னம் அளித்தல் என்று பகவான் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆஸ்ரமம் இன்று எல்லாவற்றிலும் மிகப்பெரிய அளவில் வளர்ச்சியைக் கண்டுள்ளது.

அடுத்து பகவானின் உபதேசம்: பகவானின் உயரிய, இயல்பான எப்போதும் இருக்கிற ஆழ்ந்த அமைதி ஒவ்வொருவருள்ளும் உள்ளது. அதுவே ஆத்ம ஸ்வரூபம். அது அடைய வேண்டிய ஒன்று இல்லை. எப்போதும் இருப்பதை உணர வேண்டிய ஒன்றே. இந்த சீரிய உபதேசத்தை உணர்த்த மௌன பாஷையே ஏதுவாக கொண்டார். பகவான் நரவுடல் தாங்கி இருந்தபோது அவருடன் வாழ்ந்த பக்தர்கள் அவரது உபதேசத்தையும் வாழ்க்கையையும் பலவித புத்தகங்களாகவும், செய்யுட்களாகவும் வெண்பாக்களாகவும் எழுதி நமக்களித்துச் சென்றுள்ளனர்.

கணபதி முனி சம்ஸ்கிருதத்தில் பல கிரந்தங்களை எழுதிவிட்டுச் சென்றுள்ளார். முகவைக் கண்ண முருகனாரும் பல்லாயிரக்கணக்கான பாடல்களை இயற்றியுள்ளார். சாது ஓம் ஸ்வாமிகள் செய்யுட்கள், வெண்பாக்கள் எழுதியமையோடு பல இசைப்பாடல்களையும் இசையமைத்துச் சென்றுள்ளார்.

2004-இல் பகவானின் 125-ஆவது ஜயந்தி விழா கொண்டாட திரு. லோகநாத ராஜா பொறுப்பேற்றார். ஞானரதம் தமிழகம், ஆந்திராவில் சில இடங்கள் என பல்வேறு இடங்களில் கிட்டத்தட்ட 3 மாதங்கள் சென்றது. அப்போது பல இடங்களில் ரமண ஞான இசை நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டு நன்கு நடத்தினார். அதைத் தொடர்ந்து ஆச்ரமத்திலும் பல இசை நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளோம். தற்போது ஆச்ரம நூற்றாண்டு விழாவின் அங்கமாக இசை நிகழ்ச்சிகளும் நடந்து வருகின்றன.

*இன்றைக்கு (21/01/2023) திருமதி. காயத்ரி வெங்கடராகவன் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இவர் பாலக்காடு ஸ்ரீ K.V. நாராயணஸ்வாமி வழி வந்த ஸ்ரீமதி பத்மா வீரராகவன் அவர்களின் சிஷ்யை ஆவார். ஸ்ரீ A. சுந்தரேசன் அவர்களிடம் பயின்று தேர்ந்தவர். பல சீரிய விருதுகளைப் பெற்றவர். டிசம்பர் 3, 2022-இல் ரமணாச்ரமத்தில் நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார். ஸ்ரீமதி கன்யாகுமாரி அவர்களின் சிஷ்யரான L. ராமகிருஷ்ணன் வயலின் வாசிக்கிறார். ஸ்ரீ நெய்வேலி ஸ்கந்த சுப்ரமண்யன் மிருதங்கம் வாசிக்கிறார். இவர் ஸ்ரீ திருவாரூர் கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ திருவாரூர் பக்தவத்ஸலம் ஆகியோரின் சிஷ்யர் ஆவார். ஸ்ரீ ஹரிகிஷோர் கஞ்சிரா இசைக்கிறார். அனைவரும் நல்ல ஒரு ரமண இசையைக் கேட்டு அருளில் திளைப்போம்.*

*இறுதியாக ஸ்ரீ சாது ஓம் ஸ்வாமிகளின் செய்யுள் ஒன்றைக் கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.*

*உள்ளவன் ரமண னவனே நான்*
*ஒன்றிலை யென்றென்று மவனே*
*தள்ளவும் கொள்ளவு மெவனே யுண்டு*
*சச்சிதா னந்தமெய்ச் சிவனே!*

*உள்ளவனாகிய சத்பொருள் ரமணன் ஒருவனே. நான் இன்னார் என்று யாரொருவனும் இல்லை. என்றென்றும் அவனே யிருக்கிறான். பரம்பொருளாகிய ரமணனை (இல்லாதவனென்றோ, வேண்டாமென்றோ) எவன் தள்ள முடியும்? அல்லது அவனை உடைமையாகவும் தன்னை உடையவனாகவும் எந்த பக்தன்தான் கொள்ள முடியும்? ஆகவே, சச்சிதானந்த மெய்ப்பொருளாகிய ரமண சிவன் ஒருவனே யுண்டு.*

*நமோ ரமணாய!*

# எங்கும் காண் ஆத்மாவின் காலடிச் சுவடுகள்

**கௌதமன்**

உலகப் பொருள் எவற்றின்மீதும் பற்று வைக்க வேண்டாம். பொருள் தொடர்பான ஒவ்வொன்றும் நம் மனதில் ஆசையைத் தூண்டிப் பெருக்கும் இயல்பானவை. ஆன்மா ஒன்றையே ஆழ்ந்து தேடிப் பிடித்துக் கொள்ளுங்கள். ஆன்மஞானம் அடைய விரும்புவோர் உலகப் பொருள் ஒவ்வொன்றிலும் பிரம்மத்தின் காலடிச் சுவட்டினைக் காண வேண்டும். இந்தச் சுவட்டைப் பின்பற்றிச் சென்றால், ஒரு வேட்டையாடுபவன் தான் தேடும் விலங்கினைப் பிடிப்பதுபோல் நாம் பிரம்மத்தைப் பிடித்து விடலாம் என்கிறது ப்ருஹதாரண்யர் உபநிடதம்.

கடமைகளை விடாது, பற்றின்றிச் செய்யப் பழகி ஆசைகளை வளரவிடாமல் அடக்கி உள்ளத் தூய்மையையும் வெளித் தூய்மையையும் காத்து வாழ்பவன் ஆன்ம ஞானத்தை அடைய இடையூறே இருக்காது. ஞானப் பயிற்சி என்பது நாள்முழுவதும் செய்யப்படும் ஒன்று. தியானம் செய்யும் நேரத்தில் மட்டுமே அல்ல. வாழ்க்கை நேரம் எல்லாமே ஞானப் பயிற்சி நடக்கிறது. தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது. உணர்ச்சிகளை அடக்கி, ஆசைகளை வரம்புமீறாமல் காத்து அகிலம் முழுவதற்கும் அன்பை வளர்த்து வாழப் பழகியவன் 24 மணிநேரமும் ஞானப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளான் என்பதே உண்மை. பல்வேறு விதமான தியான முறைக்கும் இதுவே அடித்தளம்.

சென்ற நூற்றாண்டின் மிகப்பெரிய ஆன்மிகப் பிழம்பாய்த் தோன்றி பல்லாயிரக்கணக்கான சாதகர்க்கு நேர்வழியைக் காட்டிய பகவான் ஸ்ரீ ரமணர் காட்டும் நேர்வழி இது. நம் மனதில் தோன்றும் எண்ணங்களை எல்லாம் 'நான்' என்பதைச் சுற்றியே தோன்றுகின்றது என்பதை ஆராய்ந்து, கண்டு அந்த மூலஸ்தானத்தின்மீது நம் மனதைக் குவியச் செய்வதே ஸ்ரீரமண வழி. இவ்வாறு செய்யச் செய்ய 'நான்' என்ற எண்ணமே தோன்றா நிலை வந்து எய்தும். இந்த அனாத்ம சிந்தனை அழிந்தபின் இதயத்தில் நிலை கொண்ட ஆன்மா வெளிப்பட்டு ஜ்வலிக்கிறது.

இடையறாது ஆன்ம அதிர்வு இதயத்தில் நிலைபெற்ற பின்னர் சாதகனுக்கு உலகில் துயரங்கள் இல்லை. பிறப்பும், இறப்பும் அவனுக்கு இல்லை. ஆன்மாவில் நிலைபெற்றிருப்பதே நமது மெய்யான இயல்பான நிலை என்கிறது உபநிடதம்.

அவரவர் மனப்பாங்கை ஒட்டியே உபதேசமும் பதியும் என்பதையும் உபநிடதம் விளக்குகிறது.

பிரஜாபதியிடம் தேவர், மனிதர், அசுரர் ஆகிய மூன்று வகையினரும் வந்தனர். அவர்கள் பிரஜாபதியின் குருகுலத்தில் வாசம் செய்தனர். குருகுல வாசம் முடிவில் இறுதி உபதேசம் என்னவென்று வினவினார்.

பிரஜாபதியின் கூற்றுப்படி வானில் ஒரு மேகம் தோன்றி 'த' என்ற ஒரே எழுத்தை (உபதேசமாக) கூறிச் சென்றது. உபதேசம் முழுவதும் 'த' என்ற ஒரே எழுத்தில் அடங்கி விட்டது. தேவர், மனிதர், அசுரர் மூவருமே தனது மனப்பாங்கின்படி இந்த ஓரெழுத்தில் பொருள் கொண்டனர்.

தேவேந்திரன் பிரஜாபதியிடம், 'த' என்னும் எழுத்து எதைச் சுட்டிக் காட்டுகிறது என்பது விளக்கப்பட்டு நாங்கள் கட்டுக்கடங்காத இன்பத்தில் மூழ்கி எங்கள்

ஆத்ம உணர்வை இழக்கிறோம் என்பதே 'த' என்னும் சொல். 'தாம்ய த' 'கூட்டுக்குள் வைத்திடு' என்று அறிவுரையைக் குறிக்கிறது என்றார். சரியாகத் தெரிந்து கொண்டீர்கள். போய்க் கட்டுக்குள் அடங்கிய வாழ்க்கை நெறியைப் பின்பற்றுங்கள் என்று கூறினார்.

அவ்வாறே மனிதர்களும் 'த' என்ற எழுத்தைத் தாங்கள் புரிந்து கொண்ட முறையை விளக்கினர். 'த' என்னும் சொல் 'தத்த' என்னும் சொல்லைக் குறிக்கிறது. நாங்கள் பேராசையால் பொருள்களைக் குவித்துக் கொண்டு ஒருவருக்கும் வழங்காமல் இருக்கிறோம். 'தத்த' என்றால் வரையாது வழங்குங்கள் என்று எங்கட்கு உபதேசித்ததாக பொருள் கொண்டு, இனிமேல் சுயநலம் இன்றி அனைவருக்கும் வழங்குவோம் என்றார்.

"அதுவே சரி, சென்று வாருங்கள்" என்றார் பிரஹஸ்பதி.

அதேபோல் அசுரர்களும் 'த' என்ற எழுத்து எதைக் குறிக்கிறது என்று விளங்கி விட்டது. நாங்கள் இதுவரை மிகக் கொடூரமாக, கருணையே சிறிதுமின்றி, பிற உயிர்கள் அனைத்தையும் கொடுமைப்படுத்தினோம். 'த' என்னும் சொல் 'த்யத்வம்' கருணையுடன் இருங்கள் என்பதைக் குறிக்கிறது. இனிமேல் சகல உயிர்கட்கும் கருணை காட்டி வாழ்வோம் என்றனர்.

"அதுவே சரி, சென்று வாருங்கள்" என்றார் பிரஹஸ்பதி.

இந்தக் கதையின்படி அவரவர் தம் மனப்பாங்கிற்கு ஏற்றபடி தமக்குக் கூறப்பட்டதை வியாக்கியானம் செய்து கொள்வர்.

புலன்களை அடக்காமல் சிற்றின்பம் பெருகுவதையே நோக்கிக் கொண்டு வாழ்பவர் தேவர்கள். தமது இயல்பை உணர்ந்து புலன்களை அடக்கி வாழப் பழகுங்கள் என்பதே நல்லது என்று ஏற்கிறார்கள்.

மனிதர் தாம் சேர்த்த பொருட்கள் யாவற்றையும் எனக்கே வேண்டும் என்று பற்றிக் கொள்வர். 'த' என்ற சொல் இரப்போர்க்கு இல்லை எனாது ஈய வேண்டும் என்பதைக் குறிப்பதாக ஏற்றுக் கொண்டனர்.

'இரக்கம் என்ற பொருள் இலாத நெஞ்சினர்' என்று கம்பரால் வர்ணிக்கப்படும் அசுரர்கள் தம் குறையை உணர்ந்து "எல்லோரிடத்தும் கருணையுடன் இருக்க வேண்டும்" என்பதையே உபதேசப் பொருளாகக் கொண்டனர்.

அவரவர் தம் இயல்புக்கு ஏற்ப 'த' என்னும் ஓரேழுத்து பொருத்தமான போதனையாய் அமைந்தது.

## திரும்பும் திருக்கண் அருள்

வித்யாசங்கர்

இலா இலை நிழல் கண்டு எம்மரம் சொல் போல்
இலா தலை சுழல் கொண்டு நான் என தவிக்கையில்
ஈடிலா தலைவன் அளவிலா அன்பினில் தோய்த்தே
சொலா கலை ஒன்றருளி கண்ணாலே அணைத்தனே.

சிந்தையில் அணைத்தோனை காருண்யனை
சிந்திக்க ஒணாதானை சிந்திக்க வைத்தோனை
சிந்தையே உருக சிந்தித்து சிந்தையற
எந்தை ரமணன் திருநீரால் திருப்பினனே.

திரும்பி அகம் தனை தன்னில் நிறுத்த
இருதயனின் திருக்கழல் தனை பற்றி
இருப்பது அது ஒன்றே என போற்றி போற்றி
திருநீராகி திருக்கழல்களுக்கு கண்ணீரால் அபிஷேகம்.

# ‘ரமண புராணம்’
# சிவ ரமணன் மெய்ப்பரிசு

**ஆகுரா**

*ஸ்ரீரமணரின் தாயார் சமாதி வைபவத்தினை தற்கால ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் துவக்க நிகழ்வாகக் கொள்ளலாம். தாயாரின் விதேகமுக்திக்குப் பின்னர் பகவான் அவ்வப்போது மலையிலிருந்து கீழே வந்து தாயார் சமாதிக்கு விஜயம் செய்வது உண்டு. பின்னர் நிரந்தரமாக ஸ்ரீ பகவான் மலையில் இருந்து கீழே வந்து தங்கலுற்றார். பின்னாளில் அன்பர்களிடம், “எந்தச் சக்தி என்னைத் திருவண்ணாமலைக்கு அழைத்து வந்ததோ, அதே சக்திதான் என்னை இங்கு இருத்தியது” என்று கூறினார். அதுமுதல் ஸ்ரீ ரமணாஸ்ரமம் உருவானதாகக் கருதப்படுகிறது.*

*இதே காலகட்டத்தில்தான் ஸ்ரீ ரமண பகவானுடைய அடியார்களில் மிகவும் முக்கியமான முருகனார் சுவாமிகள் பகவானிடம் முதன்முதலில் 1923-ஆம் ஆண்டு வந்து சேர்ந்தார்.*

*ஸ்ரீ ரமணாஸ்ரமம் உருவாகி நூறு ஆண்டுகள் ஆகியுள்ளது. அதுபோன்றே முருகனார் ஸ்ரீ பகவானை முதன்முதலில் சந்தித்து நூறு ஆண்டுகள் ஆகியுள்ளதும் இங்கு நினைவு கூறத்தக்கது. பகவான் அருளால் முருகனார் மூலம் நமக்கு அளிக்கப்பட்ட துதி நூல்தான் ‘ஸ்ரீ ரமண சந்நிதிமுறை’ என்னும் அரிய நூல். இந்த நூற்றாண்டு வைபவ நேரத்தில், அந்நூலின் தொடக்கத்திலேயே இடம்பெற்றுள்ள ‘ரமண புராணம்’*

எனும் ஞானப் பெட்டகத்தை அவனருளாலே உள்ளாழ்ந்து அறிவோமாக.

*அகத் தாமரை மலர்மீதுறை அருணாசல ரமணன்*
*நகைத்தானுற விழித்தானறச் செகுத்தான் எனதுயிரை*
*மிகத்தான் அருள் சுரந்தான் என முகவாபுரி முருகன்*
*செகத்தார் உய்ய வகுத்தான் முறை திருவாசக நிகரே.*

என்று பகவானால் திருவாசகத்துக்கு நிகரானது 'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை' என்று உறுதியாகக் கூறப்பட்டது.

'சிவபுராணம்' என்னும் பகுதி மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகத்தில் இருப்பது போன்று, 'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை' முதற்பதிப்பில் (1933) சிவபுராணத்திற்கு நிகராக ஒரு பகுதி இல்லை.

இதை உணர்ந்த முருகனார் 'சிவபுராணம்' போன்ற ஒரு பகுதியைச் சேர்க்க வேண்டும் என்று எழுத ஆரம்பித்தார். சுமார் 200 வரிகளுக்கு மேல் எழுதியாயிற்று. அதற்கு என்ன தலைப்பு கொடுப்பது என்ற கேள்வி முருகனாருக்கு எழுந்தது. திருவாசகத்தின் பாட்டுடைத் தலைவன் சிவபெருமானே ஆதலால் அங்கு 'சிவபுராணம்' என்ற தலைப்பு பொருந்தியது. இங்கு ஸ்ரீ ரமண சந்நிதிமுறையின் பாட்டுடைத் தலைவன் ரமண பெருமான் ஆனதால் 'ரமண புராணம்' என்பதுதான் பொருந்தும். ஆனால் முருகனார் 'ரமண புராணம்' என்பதாக தலைப்பு வைக்கக்கூடப் பயந்தவராய், செப்பத்தரமில்லா சிறியோன் எனத் தம்மை தாமே தாழ்த்திக் கொள்பவராதலால், மேற்கொண்டு எழுதுவதை நிறுத்திவிட்டு, அதுவரை எழுதிய அனைத்தையும் பகவானின் பாதங்களில் சமர்ப்பித்துவிட்டு பிட்சைக்குச் சென்றுவிட்டார். மாலையில் மீண்டும் திரும்பி வந்த முருகனாரைப் பார்த்தவுடன் பகவான், அவர் எழுதி வைத்த தாள்களைக் கொடுத்து "அவற்றைப் பார்" என்று கூறினார். அந்தத்

தாள்களை ஒவ்வொன்றையும் பிரித்துப் பார்க்கப் பார்க்க அவற்றில் 'ரமண புராணம்' 'ரமண புராணம்' என்றே பகவானால் தலைப்பிட்டு எழுதப்பட்டு இருந்ததைக் கண்ட முருகனார் அப்படியே திகைப்பில் உறைந்து போனார்.

அது மட்டும் அல்லாது மேற்கொண்டும் முன்னூறுக்கும் மேற்பட்ட வரிகளைச் சேர்த்து ரமணரே முடித்தும் இருந்தார்.. மணிவாசகர் சொல்ல சிவபெருமான் தனது கையெழுத்தில் 'திருவாசகம்' வடித்தது போன்றே, ஸ்ரீ ரமண பகவான் முருகனார் சுவாமிகளின் எண்ண ஓட்டத்தை எழுத்தில் வடித்துக் கொடுத்தார். ஸ்ரீ ரமணர் சிவபெருமானாகவும், நந்தீசன் மணிவாசகனாகவும், பின்னர் அவரே ஸ்ரீ முருகனாராகவும் ஏய்ந்தது அவ் வுழுவல்.

'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை' இரண்டாம் பதிப்பில் (1939), 'ரமண புராணம்' சேர்க்கப் பட்டது. அது அச்சு ஏறும் முன்னர் தவறுகள் சரி பார்க்கப் பட்டது. அந்த நிலையில் முருகனார் ஓர் அடையாளக் குறியீட்டின் மூலம் பகவானால் எழுதப்பட்ட வரிகளை "இவை பகவானால் எழுதப்பட்டவை" என்று குறியீடு செய்திருந்தார்.

இந்நிலையில் பிரதிகளின் படிகள் இறுதித் திருத்தத்துக்காக பகவானிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பகவான் அவைகளைப் பார்த்துக் கொண்டே வரும் போது முருகனாரின் அடையாளக்குறியீட்டும் அதன் விளக்கமும் அவர் பார்வையில் பட்டது. "ஓஹோ! இது மட்டும்தான் பகவான் எழுதியதோ?" என்று முருகனாரைப் பார்த்துக் கேட்டார். அந்தக் கேள்வியின் சரியான பொருளைப் புரிந்துகொண்ட முருகனார், "பகவானே என்னால் எழுதப்பட்டது எதுவும் இல்லை. எல்லாம் தங்களின் அருட்செயல்தான்", என்று கண்கள் குளமாக தாசானுதாசனாகத் தரையில் வீழ்ந்து பகவானிடம் தாழ்ந்து பணிந்தார். பின்னர் அந்த தனிக்

குறியீடுகள் நீக்கியே அச்சிடப் பணித்தார். பிற்காலத்தே முருகனாரிடம் பகவானின் உபதேச நூல்களுக்கான பொருளைப் பயின்ற ஸ்ரீமதி. கனகம்மாள் முருகனாரிடம், “ரமண புராணத்தில் பகவான் எழுதிய வரிகள் எவை?” என்று ஆர்வமிகுதியில் கேட்டபோது, “அந்த முருகனார் அன்றே செத்து விட்டான், அதைப் பற்றி எதுவும் கேட்க வேண்டாம்”, என்று முற்றுப்புள்ளி வைத்து விட்டாராம்.

ஸ்ரீ ரமணாச்ரம நிர்வாகம் ஏற்பட்டு நூறு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், அதுபோன்றே ஸ்ரீ முருகனார் சுவாமிகள் பகவானை முதன்முதலில் நேரில் சந்தித்த அந்த மாபெரும் நிகழ்வு நேர்ந்து நூறு ஆண்டுகள் கடந்துவிட்டது. இந்த அரிய நிகழ்வுகளை முன்னிறுத்தி, ஸ்ரீ ரமண புராணம் என்னுள் ஏற்படுத்திய தாக்கத்தை, என்னால் அதன் பொருளைப் புரிந்துகொண்ட அளவில் பகிர்ந்து கொள்ள முயல்கிறேன். என்னால் புரிந்து கொண்ட அளவில் என்பதைவிட, பகவான் எனக்குப் புரிய வைத்த அளவில் என்று கூறுவதே சரியானதாக இருக்கும்.

சிவபுராணம் போன்றதே ரமண புராணமும். இதை வேதம் ஓதுவது போன்றே பாராயணம் செய்ய வேண்டும். சில நேரங்களில் அனிச்சையாகச் சொல்லும் பொது சிவபுராண வரிகள் ரமண புராணத்தில் கொண்டு சேர்ப்பதும், ரமண புராண வரிகள் சிவபுராணத்தில் கொண்டு சேர்ப்பதும் அனுபவமாக ஆகியுள்ளது. இவை இரண்டும் மகா மந்திரங்கள். ஆன்ம நாட்டம் கொண்டவர்களைக் கரை சேர்க்கும் வல்லமை கொண்டவை. ரமண புராணம் ஓதிய வண்ணம் கிரிவலம் வருவது மிகவும் விசேஷமானது. இதை ஓதிக்கொண்டே வலம் வரும்போது நமக்குப் பெருமூச்சு இரைக்காது.

இதன் ஒரு அடி அடுத்த அடிக்கு எந்தவித சிரமமும் இல்லாது மிகவும் இலகுவாக ஈர்த்துச் செல்லும். வார்த்தைகள் கடுமையான தமிழ் என்றாலும் மிக எளிமையாக நமது நாவில் நடமிடும்.


சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர், அருணாசலம் வந்து செல்லும் ஆரம்ப காலங்களில், இரவு பகல், வெயில் மழை பாராது நான் கிரிவலம் செய்வதுண்டு.

பெரும்பாலும் ஸ்ரீ ரமணாஸ்ரம அன்பர் மௌலி அவர்களுடன் சேர்ந்து கிரிவலம் வந்ததுண்டு. அன்பர் பகவான் பாடல்களைப் பாடிய வண்ணம் வருவார். ஒரு நாள் "என்ன பாடுகிறீர்கள்?" என்று கேட்டேன். அவர், "உங்களுக்குத் திருவாசகம் தெரியுமா?", என்று கேட்டார். நானோ மார்க்சியவாதியாக இருந்து பகவானிடம் சரணடைந்திருந்த நேரம்.

"பக்தி இலக்கியங்கள் எதுவும் தெரியாது", என்று கூறினேன். அவர், "இது சிவபுராணம் போன்ற ரமண புராணம்", என்றார். எனக்குள் ஒரு ஏக்கம். எதுவும் தெரிந்து கொள்ளாது காலம் கடந்து விட்டதே என்பதாக என்னுள் ஒரு தாழ்வு மனப்பான்மை. எதுவும் தெரியவில்லை என்ற குற்ற உணர்வு. சில மாதங்கள் கடந்தன. கிரிவலம் தொடர்ந்தது.

முந்தைய காட்சியில் ஒரு சிறிய மாற்றம். ரமண அன்பரும் நானும் அன்றைய இரவில் கிரிவலம் செய்கிறோம். ரமண புராணம் பாராயணம் செய்த வண்ணம்.

அவர் ஒரு அடி பாட, அடுத்த அடி பாட நான் இணைந்து கொள்கிறேன். இப்படியாக மாறி மாறிப் பாடிய வண்ணம் கிரிவலம் செல்கிறோம். இடையில் அவருக்கு ஒரு வரி நழுவ அதை நான் எடுத்துக் கொடுக்கிறேன். அருணாசலனும் ரமண புராணமும்



எங்கே கொண்டு சேர்த்துவிட்டது. உன் மனதை அந்த ஆன்மா படிக்கிறது. உன் எண்ணம், உன் ஏக்கம் நிறைவேறுகிறது. ரமண புராணம் ஒரு மந்திரம். அதுவே ஆன்மா.

மற்றும் ஒருமுறை கிரிவலம் செய்ய வேண்டி சென்னையில் இருந்து இரவு இரண்டு மணிக்கு ஆஸ்ரமம் வந்தடைந்தேன். உடல் சுத்தம் செய்து கொண்டு கிரிவலம் தொடர ஆஸ்ரமத்திற்கு எதிர் சாரியில் உள்ள மோர்வி விடுதியில் நுழைகிறேன். அங்கு ஒரு கிணறு இருக்கும். அதன் ஓரத்தில் காலை நீட்டி ஒரு வயோதிகர் அமர்ந்து ஏதோ குறையுடன் தெலுங்கில் புலம்பிக் கொண்டிருந்தார். நான் தெலுங்கிலேயே என்ன பிரச்சினை என்று வினவினேன்.

அவர் தனக்கு ஹைதராபாத் என்றும் முதன்முறையாக ஆஸ்ரமம் மற்றும் அருணாசலம் வந்துள்ளதாகவும் நாளைக் காலையில் ஊர் திரும்ப வேண்டும் எனவும் கூறினார். மேலும் கிரிவலம் செய்ய ஆசை. ஆனால் பாதையும் தெரியாது, கால் மூட்டும் வலிக்கிறது. எப்படி கிரிவலம் செய்வது? என்று கவலை தெரிவித்தார். நான் துணை வருகிறேன், என்னுடன் இப்பொழுதே வாருங்கள் என்று எனது குளியலை முடித்துக்கொண்டு அழைத்துச் செல்லலுற்றேன். எப்பொழுதும்போல் பலத்த குரலுடன் (கத்திய வண்ணம் என்பதே சரி) ரமண புராணம் பாராயணம் செய்த வண்ணம் கிரிவலம் செய்துகொண்டே அவரை அழைத்துக்கொண்டு நடந்தேன். அவர் மெதுவாக என்னைத் தொடர்ந்தார். வாயுலிங்கம் கடந்த பின்னர் அவரை நோக்கி, "இனி விடிந்துவிட்டது. நீங்கள் மேற்கொண்டு கிரிவலம் செய்ய பாதை தெரிந்துவிடும்", என்று கூறி என் கிரிவலம் நடை வேகம் எடுக்க எத்தனித்தேன். அவர் கண்ணீர்மல்க தெலுங்கில், அவருக்கு நான் செய்து வந்த பாராயணம் என்ன என்பது தெரியாது. என்றாலும் கேட்டுக்கொண்டே நடந்ததில் தனக்கு மூட்டு வலியே தெரியவில்லை என்றார். கிரிவலம் செய்ய முடிந்தது பெரிய ஆச்சரியம் என நன்றி கூறினார். அவருக்கு தமிழ் தெரியாது. மொழி அறியாவிடினும், அவரை ரமண புராணம் உடல் உணர்வை மறக்க வைத்துள்ளது. தேகாபிமானத்தை இழக்கச் செய்துள்ளது. இது சத்தியம்.

முருகனார் ரமண புராணத்தின் முடிவில் எழுதிய நேரிசை வெண்பாவில் என்ன கூறியுள்ளார் பாருங்கள்.

*கோளில் அறிவே நிர்க்குணமே அறிவறியா*
*நாளில் எனை ஆண்ட குரு நாயகமே மாளுறும் இத்*
*தேகம் நான் எனும் மயல் சீத்த அருட்செல்வமே*
*சார்க நான் உந்தன் சரண்.*

இது எவ்வளவு சத்திய வாக்கு.

ரமண புராணம் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட மெய் உணர்வு. சிவபுராணமும் அவ்வாறே.

சிவபுராணத்தின் முடிவில்

......திருவடிக்கீழ்

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

பொருள் உணர்ந்து சொல்லுதல், பொருள் அறிந்து சொல்லுதல் அல்ல. சுட்டறிவால் அறிந்து கொள்ளுதல் என்பது சொல்லற்கு அரியானை, எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி சரணாகதி அடைதலுக்கு வழி மட்டுமே காட்டும். உணர்தல் ஒன்றே அதை அடைய உள்ள ஒரே மார்க்கம். ரமண புராணம் என்னும் ரமணரின் மெய்ப் பரிசு எய்த, சுட்டறிவு கொண்டு அறிய முயற்சிப்பது, உயிரின் அகந்தை அழிந்து மெய்ப்பொருளை உணர வழி வகுக்கலாம். எனவே இனி ரமண புராணத்தில் நுழைவோம். எனக்கு விளங்கிய அளவில் அதன் பொருள் எழுத ரமணரைத் தொழுது துவங்கலாம். அறிவு உணரா வாழும் என்னை ஒளிர்விக்கும் அந்த அருணை நாயகன், அனைவர்க்கும் ஒளி கொடுப்பான்.

இன்ன மனம் ஒருங்கி எண்ணித் துதித்து நிதம்
நன்னர் வழிபடூஉ நர்த்தவத்தோர் மாமோக
ஐயத்தின் நீங்கி அறத் தெளிந்த சித்தத்தால்
வையத்தின் வான நணித்தாக வாய்க்கப் பெற்று
ஆண்டான் அருள் வெளிக்கே ஆண்டான் அருள் நடனம் கண்டு
ஆண்டான் அருள் அடிக்கீழ் ஆண்டான் அருள் அமுது உண்டு
ஊன் நந்து புன் பிறவி ஓய்ந்து ஒருங்கு வாழ்வர் நீடு
ஆனந்தமாக அமர்ந்து.

ரமண புராண இறுதி வரிகள். ரமண புராண சிந்தனைகள் பகிர்தல் இனியும் தொடரும்.....

# தக்ஷிணாமூர்த்தி ரூபிணி

## தீபா மகேஷ்

பகவான் ரமணரை ஆதி குரு தக்ஷிணாமூர்த்தியின் ஸ்வரூபமாகவே நாம் வழிபடுகிறோம். தக்ஷிணாமூர்த்தி கல்லால விருக்ஷத்தின் கீழ் அமர்ந்து, சனகர், சனாதனர், சனந்தனர், சனத்குமாரர் ஆகிய நால்வருக்கும், ப்ரஹ்ம தத்துவத்தை மௌனத்தால் விளக்கியது போல, பகவானும் எத்தனையோ பக்தர்களுக்கு உயர்ந்த ப்ரஹ்ம ஞானத்தை அருளி உள்ளார்.

தக்ஷிணாமூர்த்தி என்ற சொல்லுக்கு, தக்ஷிணா+ மூர்த்தி எனப் பிரித்து, தென் திசை நோக்கி அமர்ந்த மூர்த்தி என்பது, பொதுவாக நாம் அறிந்த பொருள்.

தக்ஷிணாமூர்த்தி என்ற சொல்லை, தக்ஷிண+அமூர்த்தி என்றும் பிரிக்கலாம். தக்ஷிண என்ற சொல்லுக்கு திறமையானவன், சமர்த்தன் என்று பொருள். அமூர்த்தி என்ற சொல்லுக்கு உருவமில்லாத என்று பொருள். இறைவன் எல்லாவற்றிலும் சமர்த்தன், திறமையானவன். ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களும் அவனுடைய திறமையால்தான் நடைபெறுகின்றன. அது மட்டுமல்ல, தன் கடைக்கண் பார்வையாலும், மௌனத்தாலும், ஞானத்தை, அளிப்பதில் சமர்த்தன். அப்படி ஞானம் பெற்ற பெரியோர் பலரும், உருவம் கடந்த அந்தப் பரம்பொருளைக் குருவாகத் துதித்துள்ளனர். அருணகிரிநாதர், கந்தர் அநுபூதியில், இதை,

*உரு அன்று, அரு அன்று, உளது அன்று, இலது அன்று,*
*இருள் அன்று, ஒளி அன்று என நின்ற அதுவே*

என்று பாடுகிறார்.

தக்ஷிணாமூர்த்தி என்று சொன்னவுடன்,

*சித்ரம் வடதரோர்மூலே வ்ருத்3தா4: ஶிஷ்யா:*
*கு3ருர்யுவா*
*கு3ரோஸ்து மௌனம் வ்யாக்2யாநம் ஶிஷ்யாஸ்து*
*சி2ந்நஸம்ஶயா:*

என்று இந்த ஸ்லோகத்தில் வரும் சித்திரமே நம் மனதில் தோன்றும். ஆல மரத்தின் அடியில் அமர்ந்து, மௌனமாக ஆழ்ந்த நிஷ்டையில் அமர்ந்திருக்கும் யுவாவான குரு, வயதான சிஷ்யர்களுக்கு, மௌனத்தால், உபதேசம் செய்து அவர்கள் சந்தேகங்களை நீக்கினார். (பகவான் தன்னுடைய தக்ஷிணாமூர்த்தி ஸ்லோக மொழிபெயர்ப்பில், யுவாவிற்குப் பதிலாக 'பாலன்' என்ற பதத்தை உபயோகப்படுத்துகிறார்).

இப்படி தக்ஷிணாமூர்த்தியை நாம் ஆண் ரூபத்திலேயே தியானம் செய்கிறோம்.

ஆனால், லலிதா ஸஹஸ்ரநாமம், தேவியை, தக்ஷிணாமூர்த்தி ரூபிணி என்று துதிக்கிறது.

*ஸ்வதந்த்ரா ஸர்வதந்த்ரேஶீ த3க்ஷிணாமூர்திரூபிணீ ।*
*ஸனகாதி3ஸமாராத்4யா ஶிவஞானப்ரதா3யினீ ॥*

தன்னை ஆராதனை செய்த சனகர் முதலான ரிஷிகளுக்கு, சிவஞானத்தை வழங்கியவள் என்று அன்னை லலிதாம்பிகையைப் போற்றுகிறது.

அதெப்படி சிவன், சக்தி இருவரும் தக்ஷிணாமூர்த்தியாக இருக்க முடியும்? இதைப் புரிந்து கொள்ள, ஆண் பெண் பேதம் கடந்த, அத்வைத நோக்கோடு கொஞ்சம் ஆராய்வோம்.

*இந்த பிரபஞ்சத்தில் நாம் பார்க்கும் அத்தனையும் சக்தியின் ஸ்வரூபமே. நாம் ஐம்புலன்களால் அறிவது, உணர்வது எல்லாம் சக்தியின் வெளிப்பாடுதான். காற்றிலே, மரங்கள் அசைவதைப் பார்க்கிறோம், ஆனால், காற்றைப் பார்க்க முடிவதில்லை. மரங்கள் அசைவது காற்றின் வெளிப்பாடு.*

*வெளிப்படுவது எல்லாம் சக்தியின் வடிவம். வெளிப்படாது, உள்ளிருந்து இயக்குவது சிவம். (That which manifests, is Sakthi. That which unmanifest, is Shiva).*

*காட்சிகள் சக்தி. அதில் உள்ள சூட்சுமம் சிவம்.*

*அதனால்தான் அன்னை தக்ஷிணாமூர்த்தியின் ரூபமாக இருந்து,சிவஞானத்தை வழங்குகிறாள் (ஶிவஞானப்ரதா[3]யினீ).*

*சிவஞானத்தை வழங்குவது மட்டுமல்லாமல், அவளே அந்த ப்ரஹ்ம தத்துவத்தின் ஸ்வரூபமாக, சிவமாக இருக்கிறாள். அதனாலேயே, ஸ்ரீ ஆதிசங்கரர், தனது, மீனாட்சி பஞ்சரத்ன ஸ்தோத்ரத்தில்,*

*விஷ்ணு ப்[3]ரஹ்மஸுரேந்த்[3]ர ஸேவிதபதா[3]ம்*
*தத்வஸ்வரூபாம் ஶிவாம் ।*
*மீனாக்ஷீம் ப்ரணதோऽஸ்மி ஸந்ததமஹம்*
*காருண்யவாராம் நிதி[4]ம் ॥*

*என்று அவளைப் போற்றுகிறார்.*

*ஆனாலும், இந்த ஆழ்ந்த, நுட்பமான விஷயங்களை அறியாதவர்கள், சிவம் பெரிதா, சக்தி பெரிதா என்று விவாதிப்பது உண்டு. அப்படிப்பட்ட ஒரு சுவையான சம்பவம், பகவான் காலத்திலும் நடந்தது.*

*பகவானின் சிறந்த அடியவர்களுள் ஒருவரான, ராமஸ்வாமி பிள்ளை, ஒரு நாள் பகவான் அமரும் 'ஹாலுக்கு' வந்தார். அப்போது இரு குழுக்கள்*

உணர்ச்சிகரமான விவாதத்தில் ஈடுபட்டு இருந்தனர். ஒரு குழு சிவனே உயர்ந்தவர் என்றும், மற்றொரு குழு, சக்தியே உயர்ந்தவர் என்றும் வாதிட்டு கொண்டிருந்தனர்.

இந்த விவாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்த ராமஸ்வாமி பிள்ளை, இது ரொம்ப சுலபமானது. பெண்மையைப் போற்றும் குழுவின் வாதமே 'சக்தி' வாய்ந்தது. ஆங்கிலத்தில், *HE* என்பது, *SHE*-யில் அடங்கியுள்ளது. அதனால், *SHE* தான் மிகவும் சக்தி வாய்ந்தவள் என்றார். உடனே அவர்கள், நாங்கள் வென்று விட்டோம் என்று ஆரவாரம் செய்தனர்.

ஆனால், அவர் தொடர்ந்து, பொறுங்கள், அவசரப்படாதீர்கள், *HE* என்பது தனித்து நிற்க முடியும். ஆனால், *SHE* தனியாக இருக்க முடியாது. *HE* இருந்தால் மட்டுமே அவளால் இருக்க முடியும், என்று கூறியபோது, சிவபெருமானே உயர்ந்தவர் என்று வாதிட்ட குழு நாங்கள் வென்று விட்டோம் என்று ஆரவாரம் செய்தனர்.

ராமஸ்வாமி பிள்ளையின் நகைச்சுவையை ரசித்த பகவான் கண்களில் நீர் தளும்ப வாய்விட்டுச் சிரித்தார்.

வெளிப்படையாகப் பார்ப்பதற்கு சாதாரண நிகழ்வு போல தோன்றினாலும், பகவான் சந்நிதியில் நடக்கும் அத்தனை நிகழ்வுகளும், ஆழ்ந்த அர்த்தம் கொண்டவை. இந்த நகைச்சுவை நிகழ்வு மூலம், சிவசக்தி தத்துவத்தை, மிக எளிமையாக, பகவான் நமக்குக் காட்டியுள்ளார்.

ரமணாஸ்ரமத்தில், அன்னை, ஸ்ரீசக்ர ரூபமாக, மாத்ருபூதேஸ்வரியாக, யோகாம்பிகையாக வீற்றிருந்து, தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு, சிவஞானத்தை எப்போதும் அருளிக் கொண்டிருக்கிறாள்.

அந்த தக்ஷிணாமூர்த்தி ரூபிணியை வணங்கி, அவள் அருளுக்குப் பாத்திரமாவோம்.

# ரமண சத்குரு

## ஆர்தர் ஆஸ்போர்ன்

பகவானுடைய அறிவுரைகள் அல்லது அவருடைய வழிநடத்துதல் முதலியவற்றில் எப்போதும் ஒரு புதிர் இருந்து கொண்டேயிருக்கும். அவர் யாருக்கும் தீட்சை அளித்தது கிடையாது. ஹஸ்த தீட்சையோ மந்திர உபதேசமோ செய்தது கிடையாது. இதனால் பகவான் தீட்சையின் அவசியத்தை நிராகரித்ததில்லை. மாறாக, மந்திரத்தை எங்கேயோ காதில் கேட்டு அதை உச்சரித்தால் அதனால் பயனில்லை என்று குறிப்பாகக் கூறியுள்ளார். மேலும் ஒரு மந்திரம் பயன் தருவதற்கு அதை ஜபிப்பவன் முறையாக அதிகாரம் உள்ளவனிடமிருந்து உபதேசம் பெற்றிருக்க வேண்டுமென்றும் கூறுவார். இதிலிருந்து எல்லாம் அவர் ஏதோ சாதகர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவதில்லை என்று நினைக்கக் கூடாது. உண்மையாகக் கூறப்போனால் அது ஒன்றில்தான் அவர் கண்ணுங் கருத்துமாக இருந்தார். வெறும் வறட்டுத் தத்துவத்தினால் மனத்தைத் திருப்தி செய்யக் கேட்கும் கேள்விகளை அவர் என்றுமே விரும்புவதில்லை. ஆனால் சாதனைகளுக்கு உதவக்கூடிய கேள்விகளையும் அதைச் செயல்படுத்துவதைப் பற்றிய கேள்விகளையும் ஆர்வமோடு வரவேற்று அதற்கு முழுமையாகக் கனிவோடு பதிலளித்தார். ஆச்ரமத்தில் யாருமே சோம்பேறித்தனமாக இருப்பதில்லை. அங்கே ஒரு ஆன்மீக தொழிற்சாலையே மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அங்குள்ள பக்தர்கள் எல்லோரும் சாதனையில் தீவிரமாக ஈடுபட்டனர். பகவான் அவர்களைத் தனித்தனியே மேற்பார்வையிட்டு

ஒவ்வொருவரையும் கச்சிதமாக வழிநடத்தினார். ஆனால் அவர் கடைப்பிடித்தது மௌன வழியே.

எல்லோருக்கும் தெரியும், அவர்தான் தங்களுடைய குரு என்று. அவர்கள் அவருடைய சீடர்கள் என்றும் தெரியும். தனியாக இருக்கையில் குருவைப்போல பாவித்துக்கொண்டு அவர்களுடன் பேசினார். சில சமயம் சாதனைக்குரிய அறிவுரைகளையும் வழங்கினார். ஒவ்வொரு சாதகனுடைய விசார மார்க்கமும், அவர் குறிப்பிட்ட ஏதோ ஒரு குறிப்பிட்ட சம்பவம் மூலமோ அல்லது வார்த்தையிலோ (இந்த வார்த்தை நேரடியாக இருக்காது. மறைமுகமாக இருக்கும்) ஆரம்பிக்கும். யாராவது ஒருவர் அவர் தன்னைக் குருவாகப் பாவிக்கிறாரா, மற்றவர்களுக்கு உபதேசிக்கிறாரா என்று கேள்வி கேட்டால் நேரடியான பதிலை பகவான் என்றுமே தவிர்ப்பார். அவ்வாறு இல்லாமல் இருந்தால் கண்டிப்பாக அவர் இல்லை என்று கூறியிருப்பார். மாறாக ஆமாம் என்று கூறினால் உடனே வந்தவர்கள், போனவர்கள் எல்லோரும் அவரிடம் சென்று தீட்சையளிக்குமாறு வற்புறுத்தியிருப்பார்கள். அதனால் உண்மையான பக்தர்களுக்கும், ஏதோ மேலெழுந்தவாரியாக அவரைத் தரிசிக்க வந்தவர்களுக்கும் அவர் வெளிப்படையாக வித்தியாசம் பாராட்ட வேண்டியிருக்கும். ஆனால் பகவானுடைய கனிவும் தயவும் அளவிடற்கரியது. பாரபட்சம் காட்டியிருந்தால் சிலரை மேலாகவும் சிலரைக் கீழ்நிலையிலும் இருக்குமாறு மற்றவர்களுக்குக் காட்டி யிருக்கும். ஆனால் அவருடைய விவேகத்தால் இந்தமாதிரி செய்யவில்லை. மேலும் இந்த மாதிரி பாரபட்சமெல்லாம் காட்ட அவரால் இயலாது. ஏனெனில் எல்லோரிடத்திலும் ஒரேயொரு ஆன்மாவை அவர் கண்டார். யாராவது பகவானிடம் அவர் தீட்சை கொடுக்கிறாரா என்று கேட்டால் பகவானுடைய வழக்கமான பதில், மூன்று விதமான தீட்சைகள்

உண்டு. ஹஸ்த தீட்சை, நயன தீட்சை, மௌன தீட்சை. ஆனால் மௌன தீட்சையே மிகச் சிறந்தது என்று கூறுவார். கேள்வி கேட்பவர் இதை வைத்து பகவான் எந்த மாதிரி தீட்சை கொடுக்கிறார் என்பதை ஊகித்துக் கொள்ள வேண்டும். வேதாந்தத்தில் மேற்கூறிய மூன்று தீட்சைகளை பின்வருவதோடு ஒப்பிடுவது உண்டு. பறவைகள் குஞ்சு பொரிக்க முட்டையை அடைகாக்க வேண்டும் (ஹஸ்த தீட்சை). மீன் தன் முட்டைகளைப் பார்த்தாலே போதும், குஞ்சு பொரித்து விடும் (நயன தீட்சை). ஆமை முட்டைகளைப் பற்றி நினைத்தாலே அவை குஞ்சு பொரித்து விடும் (மௌன தீட்சை).

முறையாக உபதேசம் பெற விரும்பியவர்கள் பகவானை விட்டு நீங்கி உபதேசம் பெற வேறெங்கோ சென்றார்கள். அவர்களைப் பகவான் தடுக்கவில்லை. பகவானைப் பற்றி அறிந்தவர்கள் பகவானிடமே தங்கி விட்டார்கள். இவர்களில் ஒருவரான மேஜர் சாட்விக்கிடம் பகவான் இங்கிருந்து வேறு ஏதாவது குருவை அடைய உனக்குத் தேவையிருந்தால் எப்பொழுதோ இங்கிருந்து சென்றிருப்பாய் என்றார்.

பகவான் சத்குரு, ஜீவன் முக்தர், பூரண ஞானி. அவருக்கு அயலாக யாரும் இல்லை. இருந்ததெல்லாம் ஆன்மா ஒன்றே. எனவே அவரையும் மற்றவர்களையும் ஒப்பிட முடியாது. சில சமயம் அவர் தம்முடைய பக்தர்களுக்கு வெளியே பகிர்முகமாக இலங்கும் குரு பக்தர்களின் அறியாமையை ஒட்டியே உருவம் எடுத்து வந்தது என்று கூறுவார். இந்த பகிர்முக குரு பக்தனின் மனத்தை அந்தர்முகப்படுத்தி அங்கேயிருக்கும் குருவை அறிய வேண்டும். அகத்திலிருக்கும் குருவே ஆன்மா என்பார்.

சாதாரணமாக ஞானிகள் உபதேசத்தை வெளிப்படையாக எழுதியிருந்தாலும் அதை எவ்வாறு பின்பற்றுவது என்பதை ரகசியமாக வைத்திருந்தார்கள்.

ஏனெனில் அனாதிகாரிகள் அதைப் பின்பற்றினால் அது அவர்களுக்குத் தீமையே செய்யும். ஆனால் பகவானோ தன்னுடைய முறையை, பாதையை வெளிப்படையாக வாக்கிலும் எழுத்திலும் பறைசாற்றினார். அவருடைய மௌன தீட்சை அவருடைய உபதேசத்தை ஒத்திருந்தது. தன்னுடைய மனத்தில் யாராவது ஒருவர் அவரிடம் சரணாகதி அடைந்தால் அவருடைய மௌன தீட்சை உள்ளத்தில் பாய்ந்து பக்தன் எங்கேயிருந்தாலும் வேலை செய்யும். அவ்வாறு மௌன தீட்சை பெற்ற பிறகு சாதனை எப்படிச் செய்வது என்பதை அவர்கள் பகவான் எழுதிய புத்தகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். சில சமயம் பக்தர்களிடம் பகவான், திருவண்ணாமலைக்கு வரும் யாத்திரைகூட மாயைதான். உண்மையான யாத்திரை இதயத்திற்குள் செய்ய வேண்டும் என்று கூறி தன்னுடைய நூல்களைப் படிக்கும்படி அறிவுறுத்துவார்.

இதையடுத்து மற்றொரு கேள்வி எழலாம். பகவான் கூறிய நேர்பாதை விசார மார்க்கம் என்பது அவர் திருமேனி தாங்கியிருக்கும் வரைதான் உபயோகமாக இருக்குமா அல்லது எக்காலத்துக்கும் அதைப் பின்பற்றுபவர்களுக்குப் பயன்படுமா? ஒவ்வொரு சாதகனுக்கும் குரு தேவை. பகவானும் இதைக் கூறியுள்ளார். பகவான் தொடர்ந்து, குரு என்பவர் மனித வடிவு எடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்று கூறுவார். இந்த அருவமான குரு மிக முக்கியமான தருணத்தில் மட்டுமே உதவுவார். ஆனாலும் பகவான் தன்னுடைய வழிநடத்துதலைப் பற்றி எவ்வளவு உறுதியுடன் இருந்தாரோ, அந்த உறுதியை மற்றவர்களும் உணரலாம். அவருடைய செயல்பாடு மற்றவர்களின் செயல்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.

பல காலமாக பலவிதப் பாதைகள் ஆறுகள்போல் ஆன்மாவைத் தேடி ஒன்றுக்கொன்று இணையாக ஓடின. ஆனால் கலியுகத்தில் இந்த ஆறுகளெல்லாம்

முடிவில்லாமல் மறைந்து விட்டன. இந்த நிலையில்தான் பகவான் தத்தளிக்கும் ஆன்மாக்களுக்கு விசார மார்க்கம் என்ற உயிரைக் காப்பாற்றும் கயிறைக் கொடுத்து அவர்களை மீட்டிருக்கிறார். பகவானுடைய முறை வழக்கத்திற்கு மாறாக இருக்கலாம். ஆனால் பகவான்தான் கர்த்தா. அதனாலேயே இதை ஆட்சேபிப்பது என்பது அபத்தமானது. பகவானே வழிவழியாக வரும் உபதேசம், தீட்சை அல்லது மற்ற வழிமுறைகளைத் தான் உடல் தரித்திருக்கும்போதே ஒதுக்கிவிட்டார் என்றால் ஏன் அதற்குப் பிறகும் ஒதுக்கி தனக்குண்டான வழியிலேயே வழிநடத்த மாட்டார். இப்பொழுதும்கூட பலவிதங்களில் அவருடைய வழிநடத்துதல் இருக்கிறது என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. ஒரு சமயம் பகவானிடம் உடலின் மறைவுக்குப் பிறகுகூட ஜீவன் முக்தன் ஏதாவது செயல் இயற்ற முடியுமா என்று கேட்டதற்கு பகவான் சில சமயங்களில் அவர்கள் செயலாற்ற முடியும் என்று கூறியிருக்கிறார்.

அவர் தன்னுடைய உடலை விடும் தருணத்தில் பக்தர்கள் அவரிடம் சென்று தங்களுடைய வழித்துணையாக இருந்த பகவான் தங்களைக் கைவிட்டுப் போகின்றார் என்று முறையிட்டபோது, இந்த உடலுக்கு நீங்கள் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள் என்று அவர்களைச் சாடினார். அதாவது தன்னுடலை விட்டாலும் தன்னுடைய வழித்துணை தொடர்ந்து கிடைக்கும் என்பதே அதன் பொருள்.

மற்றொரு கேள்விக்கு குரு என்பது பௌதிக உருவமல்ல. எனவே குருவுடனான தொடர்பு, அவரது உடல் மறைந்த பிறகுகூட தொடரும். உடலை விடுவதற்குமுன் பகவான், நான் சாகப்போகிறேன் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் நான் எங்கும் போகவில்லை. நான் எங்கே போகமுடியும்? நான்

இங்கேயே இருக்கிறேன் என்றார். ஏனெனில் ஞானி எங்கும் பரந்தவன். இங்கே இப்பொழுதே இருக்கும் அவனுக்கு இங்குமங்கும் என்பது இல்லை. போக்கும் வரவும் இல்லை. ஆனாலும் தத்வார்த்தமான கூற்றை என்றும் இருக்கும் உண்மையோடு எடுத்துரைத்து சாதகனின் தேவைக்கு ஏற்றபடி பதிலளிப்பது அவர் வழக்கம். நம்முடைய அறியாமையினால் நாம் அவரை விட்டாலும் அவர் நம்மை விட இயலாது. ஏனெனில் அவரே ஆன்மாவாக இருக்கிறார்.

இறுதிவரை பகவான் புத்தகங்களைத் தொடர்ந்து பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டினார். மஹாநிர்வாணத்திற்கு சில வாரங்கள் முன்வரை பிழை திருத்துவதிலும் செலவிட்டார். இந்தப் புத்தகங்களின் முக்கியமான வேலை விசார மார்க்கத்தைப் பரப்புவதே. அவர் சமாதிக்குப் பிறகு இந்த மார்க்கத்திற்கு அவசியமில்லை என்றால் புத்தகங்களுக்கும் அவசியம் இருந்திருக்காது.

பகவான் தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட உயிலை ஆமோதித்தார். அதில் ஒரு ஷரத்து அவர் உடல் விட்ட பிறகு ஆச்ரமம் ஆன்மீக மையமாக இயங்க வேண்டும் என்பது. இதுதான் பகவான் செய்தது. அவருடைய ஆச்ரமம் அவர் அருளைப் பரப்பும் மையமாக இயங்குகின்றது.

அவர் மகா நிர்வாணத்திற்குப் பிறகும், குருவாக இருக்கிறார் என்று அவருடைய பக்தர்கள் அறிவார்கள். முன்னைப் போலவே அவருடைய வழிகாட்டுதலும் அதன் சக்தியும் சூட்சுமமும், விரிவாகவும் தீவிரமாகவும் தொடர்ந்து இயங்குகின்றது. அவர் கூறியபடி உண்மையை அறிய விவாதம் தேவையில்லை. முயற்சியே தேவை. அவருடைய அருளைத் தங்கள் இதயத்தில் எழுந்தருளப் பெற்று அவர் கூறிய பாதையில் தொடர்ந்து முயற்சி செய்தால் அவர்களாகவே

பகவானுடைய வழிகாட்டலும் அருளும் தங்களுக்கு உதவுகிறதா என்று அறிவார்கள்.

அந்த துரதிருஷ்டமான இரவில் அவர் உடலை விட்ட தருணத்தில் ஒரு பிரகாசமான நட்சத்திரம் மெதுவாக வானத்தில் சென்றபொழுது ஆச்ரமத்தில் அடக்க முடியாத துயரமும் அவநம்பிக்கையும் எதிர்பார்த்ததுபோல் இல்லை. மாறாக ஒவ்வொருவரும் மற்றவர்களிடம் பகவான் அங்கேதான் இருக்கிறார் என்று கூறிக்கொண்டனர். ஒவ்வொருவரும் தங்களுடைய இதயத்தில் பகவான் இருப்பதை அனுபவித்தனர். பகவான் உடல் விட்ட தருணத்தில் தங்களுடைய துயரம் அடக்க முடியாது இருக்கும் என்று நினைத்தவர்கள்கூட மற்றவர்களைச் சமாதானப்படுத்தும் நிலையில் அமைதியாக இருந்தனர்.

பகவான் தரித்த உடல் பக்தர்களின் இறுதி தரிசனத்திற்காக ஆச்ரம ஹாலில் வைக்கப்பட்டது. வெளியே விம்மலும் அழுகையும் இருந்தாலும் உள்ளே அபூர்வமான அமைதி ஒன்று நிலவியது. அது பகவானாலேயே அளிக்கக்கூடிய அமைதி.

திருவண்ணாமலையிலும் திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள மக்களும் அவரிடம் எவ்வாறு மரியாதை காட்டினார்கள் என்பது யாருமே அறியாத அதிசயமாக இருந்தது. ஏனெனில் இரவு முழுவதும் சுற்றிலும் இருந்த கிராமத்து மக்கள் வந்த வண்ணம் இருந்தனர். வந்தவர்கள் அவர் உடலை, அவர் திருமேனியை அமைதியாகத் தரிசித்துச் சென்றனர். கூட்டம் கூட்டமாக மக்கள் திருவண்ணாமலை நகரிலிருந்து அருணாசல சிவ என்று பாடிக்கொண்டு வந்து பகவானைத் தரிசித்துச் சென்றனர்.

சமாதிக்குப் பின்னர் வந்த நாட்களில் பக்தர்களின் இந்த நம்பிக்கை அதாவது பகவான் தொடர்ந்து

அங்கிருக்கிறார் என்ற நம்பிக்கை அவர்களை ஆச்ரமத்தில் இருத்தி வைத்தது. அவர்களில் சிலர் ஒன்றுகூடி நிர்வாகக்குழு ஒன்று அமைத்து சர்வாதிகாரி நிரஞ்சனானந்த ஸ்வாமிக்கு உதவி செய்தனர்.

காலை, மாலை வேதபாராயணம் பகவானின் சமாதியில் முன்னைப்போலவே நடக்கின்றது. தியானமும், பக்தர்கள் செய்கின்றனர். முன்னைப் போலவே ஜாதி, பேத பாகுபாடின்றி எல்லோரும் அங்கே சென்று வழிபடலாம். பக்தர்களுக்கு வேண்டிய உதவி முன்னைப் போலவே வீரியமாகவும், இனிமையாகவும், சூட்சுமமாகவும் கிடைக்கின்றது.

பகவானைத் தங்கள் இதயத்தில் இருத்தி வழிபடும் பக்தர்களுக்கு அவருடைய பிரசன்னம் இதைவிட விரைவாகக் கிடைக்கின்றது. அவருடைய உதவியும் அதிக சக்தி கொண்டதாக இருக்கின்றது. அது மட்டுமல்ல! பக்தர்கள் எங்கிருந்தாலும் முன்னைப்போலவே திருவண்ணாமலைக்கு வந்தால் அவர்களுடைய உள்ளம் புத்துணர்ச்சி பெறுகிறது.


அருகிலுள்ள நகரங்களில் வசிக்கும் பக்தர்களும் தூரத்தில் வசிக்கும் பக்தர்களும் திருவண்ணாமலைக்கு வருவதை ஆவலோடு எதிர்பார்க்கின்றார்கள். தெய்வீக அருளை அடைய விரும்பும் பக்தர்கள் கடந்த காலத்தைப் போலவே இன்றும் வருகிறார்கள். பகவானுடைய சமாதியின் அருட்சக்தி மேன்மேலும் பெருகி வளர்கின்றது. அது குறைவதில்லை. அவர் திருமேனி தரித்திருந்தபொழுது தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்களை, அவ்வாறு பார்க்க இயலாதவர்கள் பொறாமையோடு பார்க்கின்றார்கள்.

பகவான் எப்பொழுதும் உள்ளேயிருக்கும் குருவைத் தேடும்படி பணித்தார். நாங்கள் வெளியே இருக்கும் பகவான் மீது வைத்திருந்த அன்பு இம்மாதிரி

செய்வதற்கு எங்களுக்கு உதவி செய்தது. ஆனாலும் பகவானுடைய வெளித்தோற்றம் தடையாக இருந்தது. இப்பொழுது உடலை மறைத்துக் கொண்டு எங்களுடைய இதயத்தில் அவர் குடியேறி விட்டதால், முன்னைவிட இதயத்திலிருக்கும் அசுத்தத்தை யெல்லாம் நீக்கிவிட்டு அவரை அங்கே ஆன்மாவாக நம்முடைய இருப்பின் சாராம்சமாகக் காண்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அவர் முன்னைவிட நமக்கு மிக அதிகமாக உதவி செய்கிறார்.

மௌனமாக உபதேசிக்கும் பகவான் சத்குரு தக்ஷிணாமூர்த்தி, அதாவது அருணகிரி யோகி, அண்ணாமலைச் சாரலில் வசித்து தன்னிடத்தில் வரும் எவருக்கும் சக்தி வாய்ந்த மௌன உபதேசத்தைத் தருவதற்குத் தயாராக இருக்கிறார். ஆனால் அந்த இடம் யாராலும் எளிதாக அடைய முடியாது. பகவானே தக்ஷிணாமூர்த்தி. மறைந்திருந்த உண்மையை எல்லோரும் அடைவதற்கு ஏற்றதாக வெளிக் கொணர்ந்திருக்கிறார். அவருடைய அருள் அவருடைய சமாதியிலிருந்து எங்கும் பல்கிப் பரவி ஒளி வீசுகின்றது. நேரடியான ராஜபாட்டை ஒரு காலத்தில் நம்மிடமிருந்து ஒளித்து வைக்கப்பட்டது. அது மீண்டும் நமக்குப் பின்பற்றுவதற்கு ஏதுவாக பகவானால் வெளிக் கொணரப்பட்டிருக்கிறது.

பகவானுடைய உடல் ஏதாவது மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்றால் அது இதுதான். அவர் எப்பொழுதுமே நீ யார் என்று விசாரம் செய் என்று கூறித் தொடர்ந்து இவ்வாறு கூறுவார்: என்னிடம் சரணாகதி அடை. நான் உனக்காக உன் மனத்தை அழிக்கின்றேன். இதயத்தில் நானார் என்ற விசாரமும் பகவானிடம் இதயத்தில் சரணாகதி அடைவதும் ஒன்றாகிவிட்டது. ஞானமும் பக்தியும் ஒன்று சேர்ந்து பூரணமாகி விட்டது.



*கண்ணுக்குக் கண்ணாய் கண்ணின்றிக் காணுனைக்*
*காணுவதெவர் பால் அருணாசலா!*
*வீடுவிட்டு ஈர்த்து உள வீடுபுக்குப் பையவுன்*
*வீடு காட்டினை யருள் அருணாசலா*
*வெளிவிட்டேன் உன்செயல் வெறுத்திடாதுஉன்அருள்*
*வெளிவிட்டு எனைக்கா அருணாசலா*

*அக்ஷரமணமாலை, பாடல்கள் 15, 97, 98.*

# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம நூற்றாண்டு விழா வைபவ நிகழ்ச்சிகள்

### தெலுங்கு பிரவசனம்
### (3-2-2023 முதல் 5-2-2023)

*ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு பெருவிழா வைபவங்கள் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதன் ஓர் அங்கமாக பிப்ரவரி 3, 2023 முதல் பிப்ரவரி 5, 2023 வரை ஸ்ரீ ரமணாச்ரம கிரந்தாலய அரங்கத்தில் 'மஹாசஹஸ்ராவதானி' பிரம்மஸ்ரீ டாக்டர். கரிகிபதி நரசிம்ம ராவ் அவர்கள் "ஸ்ரீ ரமண தத்வ போதம்" என்ற தலைப்பில் தெலுங்கில் சொற்பொழிவு நிகழ்த்தினார். அன்பர்கள் மிகுதியான அளவில் நேரில் கலந்துகொண்டு பயன் பெற்றனர். ஒவ்வொரு நாள் நிகழ்ச்சியின் இறுதியிலும் கலந்துகொண்ட அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட பந்தலில் மதிய உணவு பிரசாதமாக வழங்கப்பட்டது.*

### (26-2-2023)

*ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, 'பகவான் ரமணுல வைபவம்' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ டாக்டர் சாகண்டி கோடீஸ்வர ராவ் தெலுங்கில் சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்ச்சி ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் உள்ள ஆடிட்டோரியத்தில் பிப்ரவரி 26, 2023 ஞாயிறன்று காலை 9 மணி முதல் 11 மணி வரை நடைபெற்றது.*

*பிரம்மஸ்ரீ சாகண்டி கோடீஸ்வர ராவ் அவர்களை ஆசிரமத் தலைவர் டாக்டர் வெங்கட் எஸ்.ரமணன் அறிமுகம் செய்து வைத்தார். இதைத் தொடர்ந்து திரு. போத்தராஜூ அவர்கள் ஒரு சிறிய அறிமுக உரையாற்றினார்.*

*பிரம்மஸ்ரீ டாக்டர் சாகண்டி கோடீஸ்வர ராவ் அவர்களின் பேச்சு, பக்தி மற்றும் சாதனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாக அமைந்தது. மேலும், பகவான் ரமண மகரிஷியின் தனித்துவம் மற்றும் அருணாசல மலையின் முக்கியத்துவம் குறித்தும் பேசினார்.*

*இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சொற் பொழிவை கேட்டு பயனுற்றனர். இந்தப் பிரவசனத்தை ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆச்ரம யூடியூப்பில் நேரலையிலும் கண்டும் கேட்டும் பயனுற்றனர். நிகழ்ச்சியின் இறுதியில் கலந்து கொண்ட அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் மதிய உணவு பிரசாதமாக வழங்கப்பட்டது.*

## ஸ்ரீ வித்யா ஹோமம்
## (17-3-2023)

*மாத்ருபூதேச்வர ஆலயத்தில் ஸ்ரீசக்ர மேரு பிரதிஷ்டையின்போது பகவான் தமது திருக்கரத்தால் ஸ்ரீசக்ர மேருவைத் தொட்டு ஆசிர்வதித்தார். கும்பாபிஷேத்திற்குப் பிறகு விஸ்தாரமாக நடந்த ஸ்ரீ சக்ர பூஜையில் பகவான் கலந்து கொண்டார். 'திரிபுரா ரகசியம்' போன்ற நூல்களில் ஸ்ரீ வித்யா வழிபாட்டின் முறைகளும் தாத்பரியமும் குறிப்பிடப்பட்டுள்ளதை பகவான் சிலாகித்துக் கூறியுள்ளார்.*

*ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் பங்குனி தமிழ் மாதத்தில் முதல் வெள்ளிக்கிழமை அன்று ஸ்ரீ வித்யா ஹோமம் நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டும் கடந்த 17-3-2023 வெள்ளிக்கிழமையன்று இந்த ஹோமம் வெகு சிறப்பாக நடந்தேறியது.*

*காலை 7 மணிக்குத் துவங்கி மாலை 3 மணி வரை பூஜைகள் நடந்தன. அதில் நவாவர்ண பூஜை, ஹோமம், சுமங்கலி பூஜை, கன்யா பூஜை, பூர்ணாஹூதி மற்றும் தீபாராதனை நடைபெற்ற பின்னர் கலசங்களில் தீர்த்தங்கள் கொண்டு செல்லப்பட்டு பகவான் மற்றும் தாயார் ஆலயங்களில் அபிஷேகங்கள் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றன.*

## அதிருத்ர மஹாயக்ஞம் (23-3-2023 முதல் 27-3-2023)

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அதிருத்ர மஹாயக்ஞம் 23/3/2023 வியாழக்கிழமை முதல் 27/03/2023 திங்கட்கிழமை வரை, ஐந்து நாட்கள் வெகு விமரிசையாக நடைபெற்றது.*

*பொதுவாக அதிருத்ரம் மனிதகுலத்தின் நன்மைக்காகவும், உலகளாவிய அமைதி மற்றும் செழிப்பிற்காகவும் நடத்தப்படுகின்றது. இந்த நோக்கத்தைக் கொண்டு, உலக அமைதி மற்றும் செழிப்பிற்காக ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் இவ்வாண்டு இந்த மஹாயாகம் நடைபெற்றது.*

*யஜூர் வேதத்தின் தலைசிறந்த பகுதியாகக் கருதப்படுவது ஸ்ரீ ருத்ரம். ஸ்ரீருத்ரம் யஜூர் வேத தைத்திரீய சம்ஹிதையின் ஏழு காண்டங்களுள் நாலாவது காண்டத்தின் நடுநாயகமாக அமைந்துள்ளது.*

*யார் யார் எந்தப் பயனை விரும்பினாலும் ஸ்ரீருத்ரம் நூலில் உள்ள மந்திரங்களைத் தொடர்ந்து ஜபித்தால் நினைத்த காரியங்கள் ஈடேறும். ருத்ர ஜபத்தால் எல்லாத் தேவதைகளும் திருப்தி அடைகின்றனர் என்று சூதசம்ஹிதை கூறுகிறது. மேலும் இந்த ஜபமே அனைத்து பாவங்களுக்குச் சிறந்த பிராயச்சித்தமாகவும் விதிக்கப்பட்டுள்ளது.*

*முதலில் ருத்ரத்தை ஜபித்து அதற்குப் பின் சமகத்தையும் ஜபிப்பது சாதாரணமான முறை. 11 ருத்ரங்களும் ஒரு*



*சமகமும் சேர்ந்தது ருத்ர ஏகாதசினி. ஒருமுறை ருத்ரத்தின் பதினோரு அனுவாகத்தையும் ஜபித்துப் பிறகு சமகத்தின் முதல் அனுவாகத்தையும், இரண்டாம் முறை ருத்ரத்தை பதினோரு முறை ஜபித்துச் சமகத்தின் இரண்டாவது அனுவாகத்தையும், அவ்வாறாகப் பதினோரு முறை ஜபித்து பதினோராவது அனுவாகத்தையும் பாராயணம் செய்தால் அது லகு ருத்ரம். அதாவது 11x11=121 ருத்ரங்களும் 11 சமகங்களும் சேர்ந்தது. அதுபோன்றே பதினோரு லகு ருத்ரம், அதாவது 1331 ருத்ரங்களும் 121 சமகங்களும் சேர்ந்தது மகா ருத்ரம். பதினோரு மகா ருத்ரம், அதாவது 14641 ருத்ரங்களும் 1331 சமகங்களும் சேர்ந்தது ஒரு அதிருத்ரம் ஆகும். இவ்வாறு மொத்தத்தில் 14,641 ருத்ரங்கள் அதிருத்ரத்தில் ஜபிக்கப்படுகின்றன.*

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நடைபெற்ற இந்த அதிருத்ர மஹாயக்ஞ ஜபத்தில், தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்த 190-க்கும் மேற்பட்ட வேதபாடசாலை மாணவர்கள் மற்றும் அவர்களது ஆசிரியர்கள் பங்கேற்றனர். இதற்காகப் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான யாகசாலையில் அதிருத்ரம் நடைபெற்றது.*

*அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, சங்கல்பம், க்ரஹப்ரீதி, பூர்வாங்கம், மஹன்யாஸம், ஆவாஹனம், ஏகாதஸ ருத்ரம், ஏகாதஸ ருத்ர க்ரமார்ச்சனை முதலியன முதல் நான்கு நாட்கள் நடைபெற்றன. இறுதி நாளான 27-ஆம் தேதியன்று மஹன்யாஸம், ஏகாதஸ ருத்ரம், வஸோர்தாரா போன்றவை நடந்தேறின. பின்னர் யாககலசங்கள் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு பகவான் மற்றும் தாயார் சந்நிதிகளுக்கு கலசாபிஷேகமும் அதைத் தொடர்ந்து மஹா தீபாராதனையும் நடைபெற்றன.*

*அதிருத்ரம் நடைபெற்ற நாட்களில் இரவு சிறப்பு நிகழ்ச்சிகளாக 24-ஆம் தேதி மாலை 6 மணியளவில் சிவத்திரு பாலச்சந்திர ஓதுவார் தேவார, ரமண சந்நிதிமுறை இசை நடைபெற்றது. அன்றிரவு 8 மணிக்கு ப்ரம்மஸ்ரீ தத்வமஸி கனபாடிகள் அதிருத்ரம் செய்வதன் நோக்கம் பற்றி உபன்யாஸம் நிகழ்த்தினார். 25-ஆம் தேதி இரவு 8 மணியளவில், ஸ்ரீ ரமண பாலச்சந்தர் குழுவினர்*

*வீணை இன்னிசையும் 26-ஆம் தேதி இரவு 8 மணிக்கு திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயில் ஓதுவார் சிவத்திரு கணேச ஓதுவார் குழுவினர் தேவார இசையும் முறையே நடைபெற்றன.*

*ஐந்து நாட்கள் நடந்த இந்த முழு யக்ஞ நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் நேரில் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இந்நிகழ்வு ஸ்ரீ ரமணாச்ரம Youtube-இல் நேரடியாகவும் ஒளிபரப்பு செய்யப்பட்டது. நேரிலும், காணொலி வாயிலாகவும் சுமார் 10,000-க்கும் மேற்பட்ட அன்பர்கள் இந்த யக்ஞத்தினைக் கண்டு சிவபெருமான் மற்றும் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் அருளைப் பெற்றனர்.*

*அதிருத்ரத்தின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் தமிழ் உரையையும் ஆச்ரம தலைவர் வேங்கட் S. ரமணன் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அளித்த விளக்கங்களையும் கீழ்க்கண்ட இணைப்பின் வாயிலாகக் காணலாம்.*

*https://www.youtube.com/watch?v=lN64Fh3tUyQ*

*ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு பெரு விழா வைபவங்கள் இவ்வாண்டு பகவான் ஜயந்திவரை தொடர்ந்து நடைபெற உள்ளன.*

# ரமண கேந்திர செய்திகள்

## ஸ்ரீரமண கேந்திரம், அனந்தசாமி ஞான மண்டபம், மைலாப்பூர், சென்னை

### ‘ஸ்ரீ ரமண பகவானின் வாழ்வும் வாக்கும்’ தேசிய கருத்தரங்கம் (16-4-2023)

*02.15 - வேதபாராயணம்; 02.50 கருத்தரங்கம்; தொகுப்பாளர்: திருமதி வசந்தா ராகவன்*

*இறை வணக்கம் குமாரி சஹானா; 03.00 அக்ஷரமணியும் ஔவைக் குறளும் - கவிஞர் பொ.வே. ராஜ்குமார்*

*03.30 - ஆராதனை எனும் அருள் வழிபாடு - திரு. க்ருஷ்ணா, தினகரன் ஆன்மீக மலர் ஆசிரியர்*

*04.00 - பகவான் காணும் தாயுமானவர் - திரு ஸ்ரீனிவாசன், முன்னாள் இயக்குனர் TCS*

*04.20 - புறப்பட்டுப் போகான் புரி சடையானே - திரு ராம் மோஹன், ஆசிரியர், ரமணோதயம்*

*04.55 - ஆராதனை கவிதாஞ்சலி - திரு வித்யாசங்கர்*

*05.00 - தேநீர் இடைவெளி*

*05.15 - அண்ணலுக்கு ஓர் ஆராதனை - திரு. இசைக்கவி ரமணன்*

*06.20 - ஸ்ரீ ரமண சந்நிதிமுறை பண்ணிசை - திருவாசக செந்நாவலர் மயிலை சத்குருநாத ஓதுவார், பக்க வாத்தியங்களுடன்*

**ஸ்ரீ ரமணரின் 73ஆவது ஆராதனை பெருவிழா (18-4-2023)**

*காலை 06.00 - நாதஸ்வரம் மங்கல இசை*

*07.00 - மஹன்யாசம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம்*

*10.00 - ஸ்ரீ ரமண ஸஹஸ்ரநாம அர்ச்சனை*

*11.00 - உள்ளது நாற்பது, அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம்*

*12.15 - மதியம் தீபாராதனை, அன்னதானம், பிரசாதம்*

*மாலை 04.00 - பிரதோஷ பூஜை, பஞ்சரத்னம் பாராயணம்*

*06.45 - மயிலை மாட வீதிகளில் ரமண பகவான் திருவுருவ வீதி உலா*

*07.15 - அக்ஷரமணமாலை பாராயணம்*

**ஸ்ரீ ரமண சந்நிதிமுறை பண்ணிசை பயிற்சி வகுப்புகள்**

*அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் முற்பகல் 10.00-11.00 மணியளவில் திருவாசக செந்நாவலர் திரு. சத்குருநாத ஓதுவார் பயிற்சி வகுப்புகள் அளிக்கிறார்.*

## ரமணாலயம், குரோம்பேட்டை

*(ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலைக்கு பாத்தியப்பட்டது)*

**73வது ஸ்ரீ ரமண ஆராதனை பெருவிழா**
**18 ஏப்ரல் 2023, செவ்வாய் முற்பகல்**

*07.30 - மங்கல இசை; 08.00 வேதபாராயணம், ஸ்ரீ ரமண அஷ்டோத்ர பூஜை*

*09.30 - ஸ்ரீ ரமண சந்நிதிமுறை பண்ணிசை பக்க வாத்தியங்களுடன் திருவாசக செந்நாவலர் மயிலை திரு. சத்குருநாத ஓதுவார்*

*11.00 - அக்ஷரமணமாலை பாராயணம்*

*11.30 - தீபாராதனை, ஆராதனை பிரசாதம் - சிறப்பு விருந்து. அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.*

## ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு விழா

**அம்பாசமுத்திரம் (நெல்லை அருகில்)**
**இடம்: கல்யாணி திரை அரங்கம்**
**9 ஏப்ரல் 2023 ஞாயிறு**
**காலை *09.00* முதல் மதியம் *01.00* வரை**

*மங்கல இசையுடன் துவங்கி வேதம், தேவாரம் மற்றும் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெறும்.*

*"ரமணரின் பகவத் கீதை" திரு. ஜெய்சங்கர் நாராயணன் அவர்களின் சொற்பொழிவு*

*சிறப்புரை: ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் தலைவர்* **திரு. வெங்கட் S . ரமணன்** *அவர்கள்*

*தீபாராதனைக்குப் பின்னர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்படும். அனைவரும் திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

*விழா ஏற்பாடு: S.R. லக்ஷ்மிநாராயண ராஜா, அம்பாசமுத்திரம், 9486658177*

## ரமணாலயம், பூண்டி, தஞ்சாவூர்

**73வது ரமண ஆராதனை விழா**
**23-4-2023 ஞாயிறு முற்பகல்**

*அக்ஷரமணமாலை பாராயணம், பூஜை, ஆராதனை. மதியம் அனைவர்க்கும் அன்னதான பிரசாதம்*

## ரமண கேந்திரம், முருகனார் மந்திரம், ராமநாதபுரம்

**73ஆவது ஸ்ரீ ரமண ஆராதனை 18-04-2023 முற்பகல்**

*சிறப்புத் தலைமை தாயுமானவர் தபோவன ஸ்ரீ ருத்ரானந்த மஹராஜ் ஸ்வாமிகள். சிறப்பு சொற்பொழிவு டாக்டர் சந்திரசேகர், சுப்புராஜ் மற்றும் ராஜரத்தினம் அவர்கள். அக்ஷரமணமாலை பாராயணம். மதியம் அனைவர்க்கும் அன்னப் பிரசாதம்*

## இனிவரும் திருநாட்கள் 2023

| பூஜை/விழா/பண்டிகை | ஆங்கில தேதி/கிழமை | |
|---|---|---|
| தமிழ் வருடப் பிறப்பு | 14-04-2023 | வெள்ளி |
| பகவான் 73 ஆவது ஆராதனை | 18-04-2023 | செவ்வாய் |
| மகாபூஜை | 12-06-2023 | திங்கள் |
| பசு லட்சுமி ஆராதனை | 30-06-2023 | வெள்ளி |
| குரு பூர்ணிமா | 03-07-2023 | திங்கள் |
| பகவான் அருணையடைந்த தினம் | 01-09-2023 | வெள்ளி |
| நவராத்திரி விழா தொடக்கம் | 15-10-2023 | ஞாயிறு |
| சரஸ்வதிபூஜை | 23-10-2023 | திங்கள் |
| விஜயதசமி | 24-10-2023 | செவ்வாய் |
| தீபாவளி | 12-11-2023 | ஞாயிறு |
| கார்த்திகை தீபோற்சவம் துவக்கம் | 17-11-2023 | வெள்ளி |
| கார்த்திகை தீபம் | 26-11-2022 | ஞாயிறு |
| பகவான் 144 ஆவது ஜயந்தி | 28-12-2023 | வியாழன் |

### பௌர்ணமி நாட்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மே | 04 | வியாழன் | இரவு 11.44 | 05 | வெள்ளி | இரவு 11.03 |
| ஜூன் | 03 | சனி | காலை 11.16 | 04 | ஞாயிறு | காலை 9.11 |
| ஜூலை | 02 | ஞாயிறு | இரவு 8.21 | 03 | திங்கள் | மாலை 5.08 |

---

Ramanodhayam — Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



அதிருத்ர கலசங்கள் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு
சந்நிதியில் அபிஷேகம் நடைபெற்றது.



Registered with the Registrar of Newspaper for India RNI No.: TNTAM/2001/5542

